# சிலாங்கூர்

www.selangorkini.my | Media_Selangor | selangortv.my | MediaSelangor

இன்று இலவசம் | SMART SELANGOR

SELANGOR

திருவள்ளுவர் ஆண்டு 2051 / பிலவ ஆண்டு கார்த்திகை மாதம் / டிசம்பர் 12/2021 DECEMBER 12/2021



# சிலாங்கூர் பட்ஜெட் - 2022

சிலாங்கூர் மாநில மக்களின், வர்த்தக சமூகம் மற்றும் பொருளாதாரத் துறைக்கு பயனளிப்பதை நோக்கமாக கொண்ட 2022 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தை மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி இன்று மாநில சட்டமன்றத்தில் தாக்கல் செய்தார். இவ்வாண்டிற்கான 232 கோடி வெள்ளி வரவு செலவுத் திட்டத்தை விட அடுத்தாண்டிற்கு ஒதுக்கப்பட்ட தொகை சற்று அதிகமாகும் என்று அவர் தெரிவித்தார். அந்த தொகையில் 122 கோடி வெள்ளி அல்லது 52 விழுக்காடு நிர்வாகச் செலவினங்களுக்காகவும் 112 கோடி வெள்ளி அல்லது 48 விழுக்காடு மேம்பாட்டிற்காகவும் பயன்படுத்தப்படும் என்று அவர் சொன்னார். வரும் 2022 ஆம் ஆண்டில் 205 கோடி வெள்ளியை வருமானமாக ஈட்ட முடியும் என மாநில அரசு மதிப்பிடுவதாகவும் அது நில பிரீமியத் தொகையின் மூலம் 90 கோடியே 63 லட்சத்து 30 ஆயிரம் வெள்ளி அதாவது 44.21 விழுக்காட்டுத் தொகை பெறப்படும் என்று அவர் தெரிவித்தார்.



## ஒதுக்கீடு

## RM2.343 கோடி




**RM1.22 B**
நிர்வாக செலவு

**RM1.123 B**
மேம்பாட்டு செலவு

### இந்த பட்ஜெட் 2022 5 முக்கிய அம்சங்களை கொண்டுள்ளன.

1ல் : உயரிய பொருளாதார வளர்ச்சியை துரிதப்படுத்துவது மற்றும் வேலையளிப்பு ஆற்றலை மேம்படுத்துவது

2வது : பரிவுமிக்க சமூகத்தை மேம்படுத்துவது மற்றும் சமூக சுபிட்சத்திற்கு முன்னுரிமை வழங்குவது

3வது : சிலாங்கூர் பொது சுகாதாரத்தை வலுப்படுத்துவது

4வது : பசுமை சுற்றுப்புறத்தை உருவாக்குவது மற்றும் நீடித்த மேம்பாடு

5வது : விவேக தொழிற்நுட்பம் மற்றும் இலக்கவியலுக்கு கூடுதல் முன்னுரிமை கொடுப்பது.

ஊதியங்கள்
**RM446.73 JUTA**

சேவைகள் மற்றும் பொருட்கள்
**RM530.81 JUTA**

சொத்து
**RM11.79 JUTA**

செலுத்தவேண்டிய & நிலையான செலவினம்
**RM191.14 JUTA**

மற்ற செலவுகள்
**RM39.53 JUTA**

உள்கட்டமைப்பு
**RM351.78 JUTA**

சமூக
**RM301.57 JUTA**

பொருளாதார வளர்ச்சி
**RM292.28 JUTA**

மாநிலத்தின் வருமானம் 210 கோடி வெள்ளியாக இருக்கும் நிலையில் செலவினம் 232 கோடி வெள்ளியே 30 லட்சம் வெள்ளியாக உள்ளது. ஆகவே அடுத்தாண்டிற்கான வரவு செலவுத் திட்டம் 22 கோடியே 27 லட்சம் வெள்ளி பற்றாக்குறையை பதிவு செய்துள்ளது என்று அவர் மேலும் சொன்னார்.


**இந்தியர்களுக்கு 1.2 கோடி வெள்ளி ஒதுக்கீடு**
பக்கம் 5

**சமூக நலத் திட்டங்களுக்கு 6. 52 கோடி ரிங்கிட்**
பக்கம் 6

**ஆலயங்களைக் காத்த ஆலயம் கெர்லிங், அருள்மிகு ஸ்ரீ சுப்பிரமணியர் ஆலயம்**
பக்கம் 12

## அடுத்தாண்டு முதல் 700 சிறார்களுக்கு சம சத்துணவு வழங்கப்படும்



ஷா ஆலம் – சம சத்துணவு பெறும் சிறார்களின் எண்ணிக்கை 500 இல் இருந்து அடுத்தாண்டு 700 ஆக அதிகரிக்கப்படும் என்று சுகாதாரத் துறைக்கான ஆட்சிக்குழு உறுப்பினர் டாக்டர் சித்தி மரியா மாமுட் கூறினார்.

சம சத்துணவைப் பெறுவதிலிருந்து யாரும் விடுபடக்கூடாது என்ற நோக்கத்தின் அடிப்படையில் இத்திட்டத்தில் கூடுதலாக 200 சிறார்கள் சேர்க்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார். இதன் மூலம் சிறார்கள் மத்தியில் காணப்படும் வளர்ச்சி குறைபாட்டை களைய முடியும் என்று சிலாங்கூர் கினிக்கு அளித்த பேட்டியில் அவர் குறிப்பிட்டார். "அனாக் சிலாங்கூர் அனாக் சேஹாட்" (அசாஸ்) எனும் இத்திட்டம் இவ்வாண்டு தொடக்கப்பட்டது. தகுதி உள்ள சிறார்களுக்கு பால் மற்றும் சம சத்துணவு இத்திட்டத்தின் வழி வழங்கப்படுகிறது என்றார் அவர்.

வளர்ச்சி குன்றிய மற்றும் ஊட்டச்சத்து குறைபாடு உள்ள சிறார்களுக்கான இத்திட்டத்தின் கீழ் பயன்பெறுவோரின் எண்ணிக்கையை 500 விருந்து 700 ஆக உயர்த்தியுள்ளோம். என்றும் அவர் சொன்னார். சுகாதாரத் துறைக்கு அடுத்தாண்டில் 6 கோடியே 50 லட்சம் வெள்ளி ஒதுக்கப்படுவதாக மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கடந்த வெள்ளியன்று 2022 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தை தாக்கல் செய்த போது கூறியிருந்தார். இவ்வாண்டு வரவு செலவுத் திட்டத்தில் சுகாதாரத் துறைக்கு 5 கோடியே 65 லட்சம் வெள்ளி ஒதுக்கப்பட்டிருந்தது.

இந்த மானியத்திலிருந்து பத்து லட்சம் வெள்ளி அசாஸ் திட்டத்திற்கு ஒதுக்கப்படும். இதன் வழி 700 சிறார்கள் 10 மாதங்களுக்கு சமசத்துணவைப் பெறுவர்.

# சிலாங்கூர் சுல்தான் பிறந்த நாள் : 57 பேருக்கு உயரிய விருதுகள்

கிள்ளான் – மேன்மை தங்கிய சிலாங்கூர் சுல்தான் ஷராபுடின் இட்ரிஸ் ஷாவின் 75வது பிறந்த நாளை முன்னிட்டு 57 பேருக்கு உயரிய விருதுகளும் பட்டங்களும் வழங்கப்பட்டன.

இந்த விருதளிப்பு நிகழ்வு இன்று காலை இங்குள்ள இஸ்தானா ஆலம்ஷா பாலாய்ரோங் ஸ்ரீயில் நடைபெற்றது.

விருது பெறுவோர் பட்டியலில் சிலாங்கூர் அரச மன்றத்தின் உறுப்பினர் ராஜா டான் ஸ்ரீ அர்ஷாட் துன் ஊடா முதலிடம் வகிக்கிறார். அவருக்கு டி.கே. 11 எனப்படும் டர்ஜா கெராபாட் சிலாங்கூர் விருது வழங்கப்பட்டது.

சுகாதாரத் துறை தலைமை இயக்குநர் டான் ஸ்ரீ டாக்டர் நோர் ஹிஷாம் அப்துல்லா மற்றும் தரைப்படை தளபதி ஜெனரல் டான்ஸ்ரீ ஜம்ரோஸ் முகமது ஜைன் ஆகியோர் டத்தோ ஸ்ரீ அந்தஸ்தை தாங்கி வரும் ஸ்ரீ



படுகா மக்கோத்தா சிலாங்கூர் விருதை (எஸ்.பி.எம்.எஸ்.) பெற்றனர். டத்தோ செத்தியா அந்தஸ்து கொண்ட டத்தோ செத்தியா–சுல்தான் ஷராபுடின் இட்ரிஸ் ஷா (எஸ். எஸ்.ஐ.எஸ்.) விருது மலேசியத் கல்வித் துறை தலைமை இயக்குநர் டத்தோ டாக்டர் ஹபிபா அப்து ரஹிம் மற்றும் மலேசிய ஷரியா நீதித்துறை தலைமை இயக்குநர்/ தலைமை ஷரியா நீதிபதி டத்தோ டாக்டர் முகமது நாயிம் மொக்தார் ஆகியோருக்கு வழங்கப்பட்டது.

டத்தோ அந்தஸ்தை தாங்கி வரும் டி.பி.எம்.எஸ். எனப்படும் படுகா மக்கோத்தா சிலாங்கூர் விருதை 10 பேர் பெற்றனர். டி.எஸ்.ஐ.எஸ். அந்தஸ்து கொண்ட டர்ஜா கெபெசாரான் டத்தோ டத்தோ–சுல்தான் ஷராபுடின் விருதை சுங்கை பூலோ மருத்துவமனையின் பொது மருத்துவம் மற்றும் நிபுணத்துவ ஆலோசக சேவைத் துறையின் தலைவர் டாக்டர் சி. சுரேஷ் குமார் உள்பட 16 பேர் பெற்றனர். இந்நிகழ்வில் மேலும் 26 பேருக்கு எம்.எம்.எஸ். எனப்படும் டர்ஜா கெபெசாரான் செத்திய மக்கோத்தா விருது வழங்கப்பட்டது.

# 2022 பட்ஜெட்டில் ஹிஜ்ரா நிர்வாக கட்டணம் 4 விழுக்காடு குறைப்பு



naeemraffi/selangorkini.my

ஷா ஆலம் – சிலாங்கூர் ஹிஜ்ரா அறவாரியத்தின் வர்த்தக கடனுதவிக்கான நிர்வாக கட்டணம் 2022 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தில் 4 விழுக்காடு குறைக்கப்பட்டுள்ளது.

வணிகர்களின் நலனில் மாநில அரசு கொண்டுள்ள அக்கறையை இந்த கட்டணக் குறைப்பு புலப்படுத்துவதாக உள்ளது என்று பெர்மாத்தாங் சட்டமன்ற உறுப்பினர் ரோசானா ஜைனால் அபிடின் கூறினார்.

இதன் வழி ஹிஜ்ரா பயனானிகள் செலுத்த வேண்டிய கட்டணத்தைக் காட்டிலும் கூடுதல் தொகையை சேமிப்பில் வைக்க முடியும் என்பதோடு எதிர்கார அவசர தேவைகளுக்கும் தங்களைத் தயார் படுத்திக் கொள்ள இயலும் என்று அவர் சொன்னார். கடந்த வெள்ளிக் கிழமை சட்டமன்றத்தில் 2022 வரவு செலவுத் திட்டத்தை தாக்கல் செய்த போது மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி வெளியிட்ட இந்த அறிவிப்பை நான் பெரிதும் வரவேற்கிறேன்.

ஹிஜ்ரா தொழில் முனைவோரின் சுமையைக் இதன் வழி குறைக்க முடியும் என நம்புகிறேன் என்றார் அவர். முன்பு ஹிஜ்ரா பயனாளிகள் எட்டு விழுக்காட்டு நிர்வாக கட்டணத்தை செலுத்தி வந்தனர். இனி நான்கு விழுக்காட்டு கட்டணத்தை மட்டுமே அவர்கள் செலுத்த வேண்டும். எஞ்சிய நான்கு விழுக்காட்டுத் தொகையை அவர்கள் தங்கள் சேமிப்பு கணக்கில் வைத்து அவசர வேளைகளில் பயன்படுத்திக் கொள்ள இயலும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

கடந்த வெள்ளிக் கிழமை தாக்கல் செய்த 2022 வரவு செலவுத் திட்டத்தின் போது ஹிஜ்ரா வர்த்தக கடனுதவி அறவாரியத்தை சீரமைப்பது தொடர்பான எட்டு திட்டங்களை மந்திரி புசார் வெளியிட்டார். முப்பதாயிரம் வெள்ளிக்கும் குறைவாக கடனுதவி பெற்றவர்களுக்கான நிர்வாக கட்டணத்தை எட்டு விழுக்காட்டிலிருந்து நான்கு விழுக்காடாக குறைப்பதும் அத்திட்டங்களில் ஒன்றாகும்.

**SELANGOR INDRU**

*Sidang pengarang*

**PENASIHAT**
Lembaga Editorial MSSB

**PENGARANG KUMPULAN**
Fathi Aris Omar

**KETUA PENGARANG**
A. Pakiyanathan

**JURUGAMBAR**
Asri sapfie,
Raheemie Arifin,
Hafiz Othman & Fikri Yusof

**Aras 11, Menara Bank Rakyat,
No. 1, Jalan Indah 14/ 8,
Seksyen 14, 40000 Shah Alam,
Selangor**
*Tel: 03-55234856*
*Faks:03-55235856*
*Email: info@mediaselangor.com*

# 6,000 கிலோ மீட்டர் குழாய்களை மாற்ற வெ.10 கோடி ஒதுக்கீடு



ஷா ஆலம் – சிலாங்கூர், கோலாம்பூர் மற்றும் புத்ரா ஜெயாவில் நீர் சேவையின் தரத்தை உயர்த்த 10 கோடி வெள்ளி 2022 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ளது. சுமார் 6,000 கிலோமீட்டர் தொலைவுக்கு முதன்மை குழாய்களை மாற்ற இந்த நிதி ஒதுக்கீடு பயன்படுத்தப்படும் என்று மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கூறினார். பயனற்று போகும் நீரின் அளவை வரும் 2025 ஆம் ஆண்டுவாக்கில் 25 விழுக்காடாக குறைப்பதை இந்த திட்டம் நோக்கமாக கொண்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார். கடந்த 2017 ஆம் ஆண்டில் 33.2 விழுக்காடாக இருந்த பயனற்றுப் போகும் நீரின் அளவை இவ்வாண்டில் 28.6 விழுக்காடாக குறைப்பதில் ஆயர் சிலாங்கூர் நிறுவனம் வெற்றி கண்டுள்ளது என்று அவர் தெரிவித்தார்.



பயனற்றுப் போகும் நீரின் அளவை 25 விழுக்காடாக குறைக்கும் இலக்கை அடைவதற்கு சிலாங்கூர், கோலாலம்பூர் மற்றும் புத்ரா ஜெயாவில் 6,000 கிலோ மீட்டர் அளவுக்கு குழாய்கள் பழுதுபார்க்கப்படும் என்று அவர் சொன்னார்.

# சிலாங்கூர் அரசு ஊழியர்களுக்கு சிறப்பு உதவியாக ஒன்றரை மாத சம்பளம்

ஷா ஆலம் –அரசு ஊழியர்களுக்கு சிறப்பு உதவியாக ஒன்றரை மாத சம்பளம் சிலாங்கூர் அரசு ஊழியர்கள் அனைவரும் இவ்வாண்டு சிறப்பு உதவியாக ஒன்றரை மாத சம்பளத்தை பெறுவார்கள்.

மாநில அரசாங்க சேவை தொடர்ந்து ஆக்கப்பூர்வமாக இருப்பதை உறுதிப்படுத்துவதற்கு சிலாங்கூர் அரசு ஊழியர்களின் கடப்பாட்டையும் முயற்சியையும் அங்கீகரிக்கும் வகையில் இந்த சிறப்பு உதவி வழங்கப்படுவதாக மாநில மந்திரிபுசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி தெரிவித்தார்.

இவ்வாண்டு நோன்பு பெருநாளுக்கு முன்னதாக ஒன்றரை மாத சம்பளத்தில் குறைந்த பட்ச தொகையாக ஆயிரம் ரிங்கிட் வழங்கப்பட்டது.

எஞ்சிய அரை மாத சம்பளத் தொகையான ஆயிரம் ரிங்கிட் இவ்வண்டு டிசம்பர் 29 ஆம் தேதி வழங்கப்படும்.

# சாலை சீராக்கப் பணி மக்களுக்கு பயன் தரும்



ஷா ஆலம் – நடப்பிலுள்ள சாலைகளை தரம் உயர்த்துவதற்கு மாநில அரசு நிதி ஒதுக்கீடு செய்துள்ளதை மேரு சட்டமன்ற உறுப்பினர் முகமது ஃபக்ருள்ராஸி முகமது மொக்தார் வரவேற்றுள்ளார்.

சாலைகளை தரம் உயர்த்துவதற்கு கூடுதலான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக கூறிய அவர், இதன் மூலம் மக்கள் குறிப்பாக மேரு தொகுதியைச் சேர்ந்தவர்கள் பெரும் பயனடைவர் என்றார்.

சாலைகளை தரம் உயர்த்தும் பணி மேருவில் மட்டுமின்றி சபாக் பெர்ணம் வரை மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. அப்பகுதியில் மோசமான நிலையில் காணப்படும் சாலைகளை உடனடியாக சீரமைக்க வேண்டியுள்ளது என்று அவர் தெரிவித்தார்.

அடிப்படை வசதிகளை உடனடியாக சீரமைப்பதன் மூலம் பொருளாதார நடவடிக்கைகளை துரிதப்படுத்த முடியும் என்பதோடு மக்களுக்கும் நன்மைகளை கொண்டு வர இயலும் என்றார் அவர்.

நிர்வாகம் மற்றும் மேம்பாட்டிற்கு முன்னுரிமை அளிக்கும் இந்த வரவு செலவுத் திட்டம் கோவிட்-19 பெருந்தொற்றால் பாதிக்கப்பட்ட மக்களின் சுமையைக் குறைக்கும் வகையிலும் அமைந்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

மாநிலத்திலுள்ள சாலைகளை சீரமைப்பதற்கு 6 கோடியே 54 லட்சம் வெள்ளி செலவிடப்படும் என்று நேற்று 2022 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தை தாக்கல் செய்த போது மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கூறியிருந்தார்.

# சுற்றுலாத் துறையின் மேம்பாட்டிற்கு 11.4 கோடி வெள்ளி நிதி



ஷா ஆலம் – கோவிட்-19 நோய்த் தொற்று பரவலால் பாதிக்கப்பட்ட சுற்றுலாத் துறைக்கு உயிரூட்டுவதற்காக 2022 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் 11 கோடியே 46 லட்சம் வெள்ளி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.


2022 ஆம் ஆண்டு முதல் 2025 வரையிலான காலக்கட்டத்தில் சுற்றுலாத் சார்ந்த அனைத்து துறைகளின் திட்ட அமலாக்கத்திற்கும் இந்த நிதி பயன்படுத்தப்படும் என்று மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கூறினார். இத் துறையை மேம்படுத்துவதற்காக கித்தா சிலாங்கூர் திட்டத்தின் கீழ் புனர்வாழ்வு மானியம் வழங்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

# சிலாங்கூர் தொழில்துறை அகண்ட அலை வரிசை உள்நாடு & வெளிநாட்டு முதலிட்டாளர்கள் ஈர்க்கும்



சிலாங்கூர் தொழில்துறை அகண்ட அலை வரிசை உள்நாடு மற்றும் வெளிநாடுகளைச் சேர்ந்த முதலிட்டாளர்கள் தங்களது முதலீடு நடவடிக்கைகளுக்கு சிலாங்கூர் முதல் தேர்வாக இருப்பதை வலுப்படுத்துவதற்காக சிறிய, நடுத்தர மற்றும் பன்னான்டு நிறுவனங்களுக்கு மின்சாரம், நீர் போன்ற அடிப்படை வசதிகளோடு தொழில்மய பகுதிகளில் நடமாடும் வசதியைக் கொண்ட அகண்ட அலைவரிசை வசதிகளும் ஏற்பாடு செய்யப்படும். சிலாங்கூர் மாநிலத்தில் முன்னணி தொலைதொடர்பு வசதிக்கான ஏற்பாட்டாளராக இருக்கும் SMARTSEL உயர் தொழிற்நுட்ட பகுதியில் அகண்ட அலைவரிசையை வசதியை மேம்படுத்துவதற்கு தற்போது இருந்துவரும் தொலைதொடர்பு துறையைச் சேர்ந்த தரப்பினருடன் ஒத்துழைக்கும். இதற்காக 2022 ஆம் ஆண்டுக்கு 60 லட்சம் ரிங்கிட் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## விவேக மாநில தொலைநோக்குத் திட்டம் வெ. 31.6 கோடி செலவில் அமலாக்கம்




ஷா ஆலம் – சிலாங்கூரை வரும் 2025 ஆம் ஆண்டிற்குள் விவேக மாநிலமாக உருவாக்கும் தொலைநோக்கு திட்டத்திற்காக 2022 வரவு செலவுத் திட்டத்தில் 31 கோடியே 60 லட்சம் வெள்ளி ஒதுக்கப்பட்டுள்ளது. ஸ்மார்ட் சிலாங்கூர் திட்டம் மற்றும் இலக்கவியல்மயத் திட்டம் ஆகியவை கோவிட்-19 பெருந்தொற்றை விரைவாகவும் திறனுடனும் எதிர்கொள்வதில் மாநில அரசுக்கு உதவியதாக மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி தெரிவித்தார்.

இலக்கவியலை அடிப்படையாகக் கொண்ட திட்டங்களை அமல்படுத்திய முதல் மாநிலமாக சிலாங்கூர் விளங்குகிறது. செலங்கா எனப்படும் பாதுகாப்பான முறையில் பொது இடங்களுக்குச் செல்வதை உறுதி செய்யும் செயலி, பிளாட்ஸ் மற்றும் இ-பஸார் ஆகியவை அவற்றில் அடங்கும் என்றார் அவர். உதாரணத்திற்கு இ-பஸார் திட்டத்தின் மூலம் 211,928 வணிகர்கள் மின் வணிகம் மூலம் 10 கோடியே 50 ஆயிரம் வெள்ளியை ஈட்டுவதற்குரிய வாய்ப்பினை ஏற்படுத்தியது என்று அவர் குறிப்பிட்டார். வரும் 2025 ஆம் ஆண்டிற்குள் சிலாங்கூரை விவேக மாநிலமாக்கும் இலக்கை அடைவதற்காக ஸ்மார்ட் சிலாங்கூர் நடவடிக்கைத் திட்டம் வரையப்பட்டுள்ளதாக அவர் மேலும் சொன்னார். இந்நோக்கத்திற்காக முன்னெடுக்கப்பட்ட முயற்சிகளில் சுமார் 60 விழுக்காடு நிறைவேற்றம் கண்டு விட்டதை ஸ்மார்ட் சிலாங்கூர் டெலிவரி யூனிட் எனப்படும் விநியோகப் பிரிவின் அறிக்கை கூறுகிறது என்று அவர் தெரிவித்தார்.

# இவ்வாண்டில் சிறப்பான முதலீட்டை சிலாங்கூர் பதிவு செய்தது




ஷா ஆலம் – கோவிட்-19 நோய்த் தொற்றுக்கு மத்தியிலும் சிலாங்கூர் மாநிலம் கடந்தாண்டைக் காட்டிலும் இவ்வாண்டில் சிறப்பான முதலீட்டை பதிவு செய்துள்ளதாக மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கூறினார்.

கடந்தாண்டு ஜனவரி முதல் ஜூன் மாதம் வரையிலான காலக்கட்டத்தில் 339 கோடி வெள்ளி மதிப்பிலான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீடுகளைப் பதிவு செய்துள்ளதாக அவர் சொன்னார்.

ஆயினும். இவ்வாண்டில் ஆறு முதல் ஏழு மாதங்கள் வரை நடமாட்டக் கட்டுப்பாட்டு ஆணையை எதிர்நோக்கிய போதிலும் முதல் ஆறு மாத காலத்தில் 464 கோடி வெள்ளி மதிப்பிலான முதலீட்டைப் பெற்றுள்ளோம். அவற்றில் 406 கோடி வெள்ளி மதிப்பிலான முதலீடு உள்நாட்டிலிருந்தும் 57.6 கோடி வெள்ளி முதலீடு வெளிநாடுகளிலிருந்தும் பெறப்பட்டன என்றார் அவர்.

கடந்த 2020 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டிற்கான அந்நிய முதலீட்டில் பெரிய வேறுபாடு காணப்படுகிறது. எல்லைகள் மூடப்பட்டதால் அந்நிய முதலீடுகளுக்கு கடுமையான விளைவுகள் ஏற்பட்டுள்ளன என்று அவர் தெரிவித்தார்.

கடந்தாண்டில் 122 திட்டங்கள் மூலம் 5,001 வேலை வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்ட வேளையில் இவ்வாண்டு 9,179 வேலை வாய்ப்புகள் உருவாக்கப்பட்டன என்று அவர் குறிப்பிட்டார்.

மாநில சட்டமன்றத்தில் கோத்தா அங்கிரிக் உறுப்பினர் முகமது நஜ்வான் ஹலிமி எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்

# "வான் போக்குவரத்து" தொழில்துறை திட்டத்திற்கு புத்துயிரூட்டும் திட்டம்



ஷா ஆலம் - வான் போக்குவரத்து தொழில்துறை திட்டத்திற்கு புத்துயிரூட்டும் நடவடிக்கையாக சிலாங்கூர் மாநில அரசாங்கம் Selangor Aviation and Technology innovations Sdn.Bhd (SELATI ), SELATI, UNISEL. SELATI -UNISEL School of Aviation, Selangor Skils Framework & Career Pathway வான் போக்குவரத்து தொழில்துறைக்காக அமைக்கப்பட்டுள்ளது. வான் போக்குவரத்து துறை வினியோகிப்பு நிறுவனத்திற்காக புதிய வேலை வாய்ப்புக்களை உருவாக்கும் முயற்சியாகவும் இது அமையும்.

# சிலாங்கூர் மாநில பட்ஜெட்

## “இந்தியர்களுக்கு 1.2 கோடி வெள்ளி ஒதுக்கீடு

## கணபதிராவ் தகவல்

ஷா ஆலம் – சிலாங்கூர் மாநில அரசின் 2022ம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தில் இந்திய சமூகத்திற்காக ஒரு கோடியே 20 லட்சம் வெள்ளி ஒதுக்கப்பட்டுள்ளதாக மாநில ஆட்சிக்குழு உறுப்பினர் வீ. கணபதிராவ் கூறினார். இந்த நிதி ஒதுக்கீட்டில் 50 லட்சம் வெள்ளி தமிழ்ப்பள்ளிகளுக்கும் 18 லட்சம் வெள்ளி இந்து ஆலயங்களுக்கும் வழங்கப்படும் என அவர் தெரிவித்தார். இதுதவிர, இந்திய கலை, கலாசார நிகழ்வுகள், சிறு பயிற்சி திட்டங்களுக்கு 5 லட்சம் வெள்ளியும் யு.பி.எஸ்.ஆர். மாணவர்களுக்கு வெகுமதி, பேருந்து கட்டணம், உயர்கல்வி மாணவர்களுக்கு உதவித் தொகை உள்ளிட்ட இந்திய மாணவர் மேம்பாட்டுத் திட்டங்களுக்கு 20 லட்சம் வெள்ளியும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்றார் அவர்.

மேலும் ஐ-சீட் எனப்படும் இந்திய சமூக மற்றும் தொழில் முனைவோர் மேம்பாட்டு இலாகாவுக்கு 11 லட்சத்து 46 ஆயிரம் வெள்ளியும் வழங்கப்படுகிறது என்று அவர் குறிப்பிட்டார்.

இவை யாவும் இந்தியர்களுக்கான பிரத்தியேக திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்ட நிதியாகும். இந்த நிதி ஒதுக்கீட்டின் மதிப்பு சுமார் 99 லட்சம் வெள்ளியை எட்டியுள்ளது. இந்த பிரத்தியேக நிதி ஒதுக்கீடு தவிர்த்து தீபாவளியை முன்னிட்டு ஜோம் ஷோப்பிங் பற்றுச் சீட்டு வழங்கும் திட்டத்திற்கு மேலும் 20 லட்சம் வெள்ளி வழங்கப்படுகிறது. இதன் வழி 2022 வரவு செலவுத் திட்டத்தில் இந்திய சமூகத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீடு 1 கோடியே 20 லட்சம் வெள்ளியை எட்டியுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.



## “ 2022 வரவு செலவுத் திட்டத்தில் இந்திய சமூகத்திற்கு கூடுதல் அனுகூலங்கள்

## கணபதிராவ் பெருமிதம்

ஷா ஆலம் – சிலாங்கூர் மாநில அரசின் 2022 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தில் இந்திய சமூகத்திற்கு நன்மை தரும் பல திட்டங்கள் அமல்படுத்தப் பட்டுள்ளதாக மாநில ஆட்சிக்குழு உறுப்பினர் வீ. கணபதிராவ் கூறினார். இந்திய சமூகத்திற்கான பிரத்தியேக திட்டங்களுக்காக சுமார் 99 லட்சம் வெள்ளியும் பொதுவான திட்டங்களின் கீழ் வழங்கப்படும் தீபாவளி ஜோம் ஷோப்பிங் திட்டத்திற்கு 20 லட்சம் வெள்ளியும் இந்த வரவு செலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்டுள்ளது என அவர் குறிப்பிட்டார். இதன் வழி சுமார் ஒரு கோடியே இருபது லட்சம் வெள்ளி இந்திய சமூகத்திற்கு கிடைப்பதற்குரிய வாய்ப்பு கிட்டுள்ளது என்று அவர் சொன்னார்., தமிழ்ப்பள்ளிகளுக்கான 50 லட்சம் வெள்ளி வருடாந்திர மானியம் இவ்வாண்டும் தொடரப்படுகிறது. கோவிட்-19 பெருந்தொற்று காரணமாக அமல்படுத்தப்பட்ட நடமாட்டக் கட்டுப்பாட்டு ஆணையினால் தமிழ், சீன மற்றும் சமயப் பள்ளிகளுக்கு இவ்வாண்டிற்கான மானியம் வழங்கும் நிகழ்வு ஒத்தி வைக்கப்பட்டிருந்தது. அந்த நிதி வழங்கும் நிகழ்வு வரும் டிசம்பர் மாதத்தில் நடைபெறவுள்ள வேளையில் அடுத்தாண்டிற்கு மேலும் 50 லட்சம் வெள்ளி ஒதுக்கப்படுகிறது என்று கணபதிராவ் தெரிவித்தார். இஸ்லாம் அல்லாத வழிபாட்டுத் தலங்களுக்கு 63 லட்சம் வெள்ளி அடுத்தாண்டு வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ளதாக கூறிய அவர், அத்தொகையில் 18 லட்சம் வெள்ளி இந்து ஆலயகங்களுக்கு பகிர்ந்தளிக்கப்படும் என தெரிவித்தார். இது தவிர, ஐ-சீட் எனப்படும் இந்திய சமூக மற்றும் தொழில்முனைவோர் மேம்பாட்டு இலாகாவுக்கான நிதி ஒதுக்கீடு அடுத்தாண்டிலும் தொடரப்பட்டுவதாகவும் அவர் குறிப்பிட்டார். கடந்தாண்டில் ஒதுக்கப்பட்ட நிதியின் மூலம் 254 பேர் பயனடைந்த வேளையில் அடுத்தாண்டில் இத்திட்டத்திற்கு 11 லட்சத்து 46 ஆயிரம் வெள்ளி ஒதுக்கப்பட்டுள்ளது என்றார் அவர். இந்திய தொழில்முனைவோருக்கு வர்த்தக உபகரணங்களை வழங்குவதை இந்த திட்டம் நோக்கமாக கொண்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. மேலும், இந்திய சமூகம் எதிர்நோக்கும் அடையாளப் பத்திரங்கள் தொடர்பான பிரச்சனைகளைக் கையாள்வதற்காக தம்மால் ஆரம்பிக்கப்பட்ட மைசெல் திட்டம் தொடரப்படுவதோடு அதில் பணியாற்றும் இரு அதிகாரிகளுக்கான சம்பளம் உள்ளிட்ட தேவைகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படுவதாகவும் கணபதிராவ் சொன்னார். மக்களுக்கு பயன்தரக்கூடிய சிறப்பான வரவு செலவுத் திட்டத்தை அறிவித்ததன் வழி நாட்டின் முன்னுதாரண மாநிலம் என்ற பெருமையை சிலாங்கூர் பெறுகிறது. சிறப்பான வரவு செலவுத் திட்டத்தை குறிப்பாக இந்திய சமூகத்தின் தேவைகளை உணர்ந்து உரிய ஒதுக்கீடுகளை வழங்கிய மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரிக்கு தாம் நன்றி தெரிவித்துக் கொள்வதாக அவர் குறிப்பிட்டார். மாநில அரசின் மானியங்கள் யாவும் மக்களுக்கு முறையாக சென்று சேர்வதை உறுதி செய்வதே தனது தலையாய கடமையாகும் என்றும் அவர் அவர் தெரிவித்தார்.

# வெ. 880,000 நிதி ஒதுக்கீட்டில் பிளாஸ்டிக் எதிர்ப்பு விழிப்புணர்வு இயக்கம்



ஷா ஆலம் – பிளாஸ்டிக், பொலிஸ்ட்ரின், பயன்படுத்தப்பட்ட சமையல் எண்ணெய் பயன்பாட்டிற்கு எதிரான பிரசார நடவடிக்கைக்காக சிலாங்கூர் மாநில அரசு 880,000 வெள்ளியை ஒதுக்கீடு செய்துள்ளது. பொது மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் இந்த சுற்றுச்சூழல் தொடர்பான இயக்கம் மேற்கொள்ளப்படுவதாக மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கூறினார். பிளாஸ்டிக், பயன்படுத்தப்பட்ட சமையல் எண்ணெய், பொலிஸ்ட்ரின் உள்ளிட்ட பொருள்களுக்கு எதிரான விழிப்புணர்வு பிரசார நடவடிக்கைகளை மேற்கொள்வதில் சிலாங்கூர் எப்போதும் முன்னோடி மாநிலமாக விளங்குவதாகவும் அவர் குறிப்பிட்டார். இந்த பிரசார நடவடிக்கையை தீவிரப்படுத்துவதற்காக 880,000 வெள்ளியை ஒதுக்கீடு செய்துள்ளோம் என்றார் அவர். இதனிடையே, மறுசுழற்சி மையங்களை அனைத்து மாவட்டங்களிலும் அமைக்க மாநிலஅரசு திட்டமிட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

# சமூக நலத் திட்டங்களுக்கு 6.52 கோடி ரிங்கிட்




ஷா ஆலம் –சிலாங்கூர் மக்களுக்கு அடுத்த ஆண்டில் பல்வேறு சமூக நல திட்டங்களை அமல்படுத்துவதற்காக மாநில அரசாங்கம் 6 கோடியே 52லட்சத்து 50,000 ரிங்கிட்டை ஒதுக்கியுள்ளது. பரிவு மிக்க அரசாங்கத்தின் நிரந்தர குழு, வீடுகள் சீரமைப்பு மற்றும் புதிதாக வீடுகள் கட்டும் திட்டத்திற்கு கூடுதலாக ஒதுக்கிய 12 லட்சம் ரிங்கிட் தொகையுடன் மொத்தம் 20 லட்சம் ரிங்கிட் ஒதுக்கப்பட்டுள்ளதாக மந்திரிபுசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி தெரிவித்தார்.

இந்த கூடுதல் ஒதுக்கீட்டின் மூலம் அதிகமானோருக்கு சமூக பொருளாதார மீட்சிக்கு உதவ முடியும் என அவர் கூறினார். B40 குறைந்த வருமானம் பெறும் தரப்பினருக்கு வசதியான மற்றும் பாதுகாப்பைக் கொண்ட வீடுகளில் குடியிருப்பதற்கு சிலாங்கூர் அரசாங்கம் உதவும் என அமிருடின் தெரிவித்தார்.

மேலும் திறனை மேம்படுத்திக் கொள்வதற்கான குறுகிய மற்றும் நடுத்தர கால பயிற்சிகளை வழங்கி மக்களின் கல்வித் தரத்தை உயர்த்துவதற்கான திட்டத்தையும் அரசாங்கம் அமல்படுத்தும் .

இதுதவிர ஏழ்மையை துடைத்தொழிப்பதற்கான உதவிக்காக 20 லட்சம் ரிங்கிட்டும் ஒதுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு விண்ணப்பத்திற்கும் 10,000 ரிங்கிட் உதவியை பெறமுடியும் என அமிருடின் ஷாரி தெரிரிவித்தார்.

## மக்கள் டியூஷன் திட்டத்திற்கு 70 லட்சம் வெள்ளி ஒதுக்கீடு



ஷா ஆலம் – வரும் 2022 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தில் மக்கள் டியூஷன் திட்டத்திற்கு 70 லட்சம் வெள்ளி ஒதுக்கப்பட்டுள்ளதாக மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கூறினார். நடப்பு கோவிட்–19 பெருந்தொற்றைக் கருத்தில் கொண்டு ஹைப்ரிட் எனப்படும் மாணவர்கள் நேரடி பங்கேற்பு மற்றும் இயங்கலை என இரு வழிகளில் இந்த வகுப்புகள் நடத்தப்படும் என்று அவர் சொன்னார். நோய்த் தொற்று பரவல் காரணமாக பள்ளிகள் மூடப்படுவதும் திறக்கப்படுவதுமாக உள்ளதால் இந்நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது என்று அவர் தெரிவித்தார். மாணவர்களின் நேரடி பங்கேற்பின் மூலம் இந்த வகுப்புகள் நடத்தப்பட்டால் மாணவர்களுக்கு மதிய உணவு வழங்கப்படும் என்றும் அவர் குறிப்பட்டார்.

## வீணாகும் நீரின் அளவை 2025 ஆம் ஆண்டில் 25 விழுக்காடாக குறைக்க இலக்கு



ஷா ஆலம் – வரும் 2025 ஆம் ஆண்டுவாக்கில் பயனற்றுப் போகும் சுத்திகரிக்கப்பட்ட நீரின் அளவை 25 விழுக்காடாக குறைக்க ஆயர் சிலாங்கூர் சென்.பெர்ஹாட் நிறுவனத்தின் வாயிலாக சிலாங்கூர் அரசு முயற்சி மேற்கொண்டு வருகிறது.

இவ்வாண்டு அக்டோபர் மாதம் வரை சிலாங்கூர், கோலாலம்பூர் மற்றும் புத்ரா ஜெயாவில் வீணாகும் நீரின் அளவு 28.2 விழுக்காடாக உள்ளதாக அடிப்படை வசதிகள் மேம்பாட்டுத் துறைக்கான ஆட்சிக்குழு உறுப்பினர் இஞ்சினியர் இஷாம் ஹஷிம் கூறினார்.

கடந்தாண்டில் இதன் அளவு 28.5 விழுக்காடாக இருந்தது. பயனற்றுப் போகும் நீரின் அளவை குறைந்த பட்ச நிலைக்கு கொண்டு வருவதற்காக குறுகிய கால மற்றும் நீண்ட காலத் திட்டங்கள் வகுக்கப்பட்டு வருகின்றன.

பயனற்றுப் போகும் நீரின் அளவை குறைப்பது எளிதான காரியம் அல்ல. இதற்கு குழாய் உள்ளிட்ட பாகங்களை மாற்றுதல், நிர்வாகம் மற்றும் அடிப்படை வசதி நிர்வாகம் உள்ளிட்ட அம்சங்களில் முறையான திட்டமிடல் தேவைப்படுகிறது என்றார் அவர்.

வீணாகும் நீரின் அளவைக் குறைப்பதில் நாம் மற்ற மாநிலங்களை ஒப்பிடக் கூடாது எனக் கூறிய அவர், மலாக்கா மற்றும் இதர மாநிலங்களைப் போலன்றி சிலாங்கூர் மிக நீண்ட தொலைவுக்கு குழாய்களைக் கொண்டுள்ளது என்றார்.

அடுத்தாண்டில் குழாய்களை மாற்றும் பணிக்காக 17 கோடியே 40 லட்சம் வெள்ளி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் பணியிட ஆய்வு, வடிவமைப்பு, திட்ட அமலாக்கம் ஆகியவற்றுக்கான செலவினத்தையும் இந்த ஒதுக்கீடு உள்ளடக்கியுள்ளது என்றும் அவர் சொன்னார்.

# அம்பாங் வெள்ளம்

## “ வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மந்திரி புசார் ஆய்வு



ஷா ஆலம் – கடும் மழை காரணமாக அம்பாங்கில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி நேற்று பார்வையிட்டார். கும்புலான் டாருள் ஏசான் வேஸ்ட் மேனேஜ்மெண்ட் நிறுவனத்தின் அதிகாரிகளுடன் இணைந்து பாதிக்கப்பட்ட இடங்களுக்கு மந்திரி புசார் வருகை புரிந்ததாக அந்நிறுவனம் தெரிவித்தது. அம்பாங் ஜெயா நகராண்மைக் கழகத்துடன் இணைந்து பாதிக்கப்பட்ட பகுதிகளில் துப்புரவுப் பணிகளை தாங்கள் மேற்கொண்டு வருவதாக அந்நிறுவனம் வெளியிட்ட அறிக்கை ஒன்று கூறியது. வெள்ளத்தினால் குவிந்த குப்பைகள் மற்றும் பழுதடைந்த மரத்தளவாடப் பொருள்களை அப்புறப்படுத்தும் பணியில் தங்கள் நிறுவனம் சார்பாக எழுபது பணியாளர்கள் ஈடுபட்டு வருவதாகவும் அது தெரிவித்தது. கடந்த வாரம் அம்பாங், உலு லங்காட், கோம்பாக் ஆகிய மாவட்டங்களில் பெய்த அடை மழையில் அம்மாவட்டங்களின் பல்வேறு பகுதிகளில் கடும் வெள்ளம் ஏற்பட்டது.

## “ பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு தலா 1,000 வெள்ளி உதவித் தொகை




ஷா ஆலம் – அம்பாங், லெம்பா ஜெயாவில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 260 குடும்பங்களுக்கு உதவ சிலாங்கூர் மாநில அரசு 260,000 வெள்ளியை ஒதுக்கியுள்ளது.

அடிப்படை உதவிகள் உள்பட தலா 1,000 வெள்ளி ரொக்கத்தை சம்பந்தப்பட்ட குடும்பங்கள் எம்.பி.ஐ. எனப்படும் மந்திரி புசார் கழகத்திடமிருந்து பெறும் என்று மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கூறினார்.

அந்த இயற்கை பேரிடரில் பாதிக்கப்பட்ட மக்களின் சிரமங்களை கருத்தில் கொண்டு அவர்களின் சுமையைக் குறைக்கும் வகையில் உதவிகளை வழங்க மாநில அரசு தயாராக உள்ளது என்று அவர் சொன்னார்.

முன்னதாக அவர், கம்போங் பிங்கிர் தீகா மற்றும் லெம்பா ஜெயா ஆகிய பகுதிகளுக்கு வருகை புரிந்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிப் பொருள்களை வழங்கினார்.

இதனிடையே, தங்கள் சார்பில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு 120,000 வெள்ளியை செலவிடுவதாக எம்.பி.ஐ. நிறுவன சமூக கடப்பாட்டு பிரிவுத் தலைவர் அகமது அஸ்ரி ஜைனால் நோர் கூறினார்.

அந்த தொகையின் மூலம் மெத்தை, சமையல் எரிவாயு கலன்கள் உள்ளிட்ட பொருள்கள் வழங்கப்பட்டன என்று அவர் குறிப்பிட்டார்.

கடந்த வாரம் அம்பாங், உலு லங்காட் மற்றும் கோம்பாக்கில் பெய்த அடை மழையினால் கடும் வெள்ளம் ஏற்பட்டது.

## கிள்ளான் ஆற்றின் நீடித்த மேம்பாடு 26,000 வீடுகள் கட்டப்படும்



ஷா ஆலம் – 2022 ஆண்டு தொடங்கி உருவாக்கப்படும் சுங்கை கிள்ளான் நீடித்த மேம்பாட்டுத் திட்டத்தில் 26, 000 வீடுகள் கட்டப்படவிருப்பதாக சிலாங்கூர் மந்திரிபுசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி இன்று அறிவித்தார்.

இதற்காக சுங்கை கிள்ளான் ஆற்று வழித்தடப் பகுதியில் 56 கிலோமீட்டர் தூரத்திற்கு அடுத்துவரும் 8 முதல் 10 ஆண்டுகளுக்கு 26,000 வீடுகள் நிர்மாணிக்கப்படும். சுங்கை கிள்ளான் ஆற்றை ஒட்டியுள்ள பகுதியில் அமல்படுத்தப்படும் மற்றொரு பொருளாதார திட்டமாக இது அமைவதாக அமிருடின் ஷாரி கூறினார்.

வாங்கக்கூடிய விலையில் 2,000 வீடுகளும், சுதந்திரமான விலையில் 1,400 வீடுகளும் கட்டப்படும் என அடுத்த ஆண்டுக்கான பட்ஜெட்டை தாக்கல் செய்தபோது அமிருடின் ஷாரி இத்தகவலை வெளியிட்டார்.

தொடர் 1

# உயர் தாக்க பொருளாதார வளர்ச்சி மற்றும் விநியோக திறன் மேம்படுத்த

## RM416.156 மில்லியன்

வணிக வசதி கொள்கை

கிள்ளான் நதியின்
நிலையான வளர்ச்சி
**GDV RM1 மில்லியன்**

நெடுஞ்சாலை
நெட்வொர்க் இணைப்பு
**RM138.13 மில்லியன்**

உள்ளாட்சி திட்டங்களை
செயல்படுத்துதல்
**RM4 மில்லியன்**

ஏற்கனவே உள்ள
சாலைகளை மேம்படுத்துதல்
**RM65.4 மில்லியன்**

புதிய சாலைகள் அமைத்தல்
**RM44 மில்லியன்**

SELANGOR INTERNATIONAL BUSINESS SUMMIT

சிலாங்கூர் சர்வதேச
வணிக உச்ச மாநாடு
**RM15 மில்லியன்**

மாநில சாலைகளை
அரசு பதிவேட்டில் பதிவு
**RM2 மில்லியன்**

சுற்றுலா துறை
**RM114 6. மில்லியன்**
2021-2025 காலத்திற்கு

பாலம் மற்றும் மேம்பாலம்
**RM8.23 மில்லியன்**

தொழில்துறை பிராட்பேண்ட்
**RM6 மில்லியன்**

ராஜா துன் உடா
நூலகத்தின் மேம்பாடு
**RM500 மில்லியன்**

தொழிலாளர் குடியிருப்பு
வளாகங்கள் கட்டுதல்

சிலாங்கூர் விமான
கண்காட்சி 2022

அபிவிருத்தி திட்டங்களை
உருவாக்க மற்றும்
மேம்படுத்த

செரண்ட
லாஜிஸ்டிக்ஸ் ஹப்

சபாக் பெர்ணம்
பொருளாதார வளர்ச்சி

Sidec
Chase Your Dreams

டிஜிட்டல் மேம்பாடு
மானியங்கள்

சிலாங்கூர் சிறுதொழில்
முனைவோர் மானியம்
**RM2 மில்லியன்**

ஹலால் தொழில்
**RM2 மில்லியன்**

இந்திய தொழில் முனைவோர்
உபகரணங்கள் உதவி திட்டம்
**RM1·146 மில்லியன்**

சிலாங்கூர் பணியாளர்
தொழில்திறன் மேம்பாட்டு பிரிவு
**RM1 மில்லியன்**

விண்வெளி தொழில் மேம்பாடு

சிலாங்கூர் சர்வதேச ஏரோ பார்க்

HIJRAH SELANGOR

ஹிஜ்ரத் தொழில்
முனைவோர்

சிலாங்கூர் தொழில் துறை
வளர்ச்சி மற்றும் மேம்பாடு
கண்காணிப்பு மையம்

சிலாங்கூர் டிஜிட்டல் பள்ளி

சிலாங்கூர் மாநில ரயில்
தொழில் கவுன்சில்

# அக்கறையுள்ள சமுதாயத்தையும் சமூக நல்லிணக்கத்தையும் உருவாக்குதல்

## RM305.19 மில்லியன்

- சிலாங்கூர் மக்கள் நல்வாழ்வு உதவி திட்டம் — **RM108 மில்லியன்**
- ஷா ஆலம் மார்டன் ஓவியம் — **RM33.4 மில்லியன்**
- பரிவுமிக்க அரசாங்க திட்டம் — **RM65.25 மில்லியன்**
- MESRA USIA EMAS — முதியோர் உதவி திட்டம் — **RM27.5 மில்லியன்**
- இளம் தலைமுறையின் வளர்ச்சி மற்றும் விளையாட்டு மேம்பாடு — **RM19.25 மில்லியன்**
- நகர்ப்புற மக்கள் நல்வாழ்வு உதவி திட்டம் — **RM10.77 மில்லியன்**
- சிலாங்கூர் மகளிர் மேம்பாடுக்கு — **RM5.03 மில்லியன்**
- மாநில அரசின் உயர்கல்வி கூட வசதி மேம்பாடு — IPT SELANGOR - **RM5 மில்லியன்**; UNISEL - **RM3 மில்லியன்**; இணைய தரவுகளை வழங்குகிறது
- சமய கல்வி மேம்பாடு — **RM5 மில்லியன்**
- சிலாங்கூர் குழந்தைகள் மேம்பாடு — **RM3 மில்லியன்**
- மக்கள் பிரத்தியோக வகுப்பு உதவிக்கு — **RM7 மில்லியன்**
- விளையாட்டு, கட்டமைப்பு மேம்பாடு — **RM4 மில்லியன்**
- உயர்கல்விக்கூட மாணவர் சன்மானம் — **RM3 மில்லியன்**
- சமய இடைநிலைப்பள்ளி நிர்மாணிப்பு — **RM3 மில்லியன்**
- சிலாங்கூர் பிள்ளைகள் உதவிக்கு — **RM3 மில்லியன்**
- உயர்கல்வி மாணவர் உதவிக்கு — **RM3 மில்லியன்**
- சிலாங்கூர் இளைஞர் இயக்கம் — **RM2.8 மில்லியன்**
- ப்ளூ பிரிண்ட் வறுமை ஒழிப்பு உதவித் திட்டம் — **RM2 மில்லியன்**
- RIDE INISIATIF RODA DARUL EHSAN — ரோடா தாருல் எஹ்சான் — **RM2 மில்லியன்**
- குறைந்த விலை அபார்ட்மெண்ட் இன்சூரன்ஸ் — **RM1.5 மில்லியன்**
- கோவிட் 19 ஆதரவற்றோர் உதவி — **RM1.25 மில்லியன்**
- சம்பந்தப்பட்ட அரசு வீடு கட்டுதல் மற்றும் பழுதுபார்க்கும் திட்டம் — **கூடுதல் RM1.2 மில்லியன்**
- இ.ஸ்போர்ட்ஸ் — **RM1.2 மில்லியன்**
- கலாச்சாரம் மற்றும் கலை நிகழ்ச்சி — **RM1 2 மில்லியன்**
- பூர்வகுடிகள் வளர்ச்சி — **RM1.5 மில்லியன்**
- சிலாங்கூர் சட்ட உதவி நிதி — **RM1 மில்லியன்**
- சுதந்திர வாழ்க்கை மையம் — **RM1 மில்லியன்**
- இஸ்லாத்தின் மகத்தான படைப்புகள் மொழிபெயர்ப்பதற்கு அர்ப்பணிப்பு — **RM1 மில்லியன்**
- ஆரம்ப நிலை காற்பந்து போட்டி — **RM1 மில்லியன்**
- அடிப்படை தொழில்நுட்ப கடன் திட்டம் — **RM1 மில்லியன்**
- யூனிசெல் சிடேக் பட்செல் நாற்காலி — **RM1 மில்லியன்**
- ஆயுள் முழுவதும் கற்றல் திட்டம் — **ஓராண்டுக்கு RM200 ஆயிரம்**
- ஒற்றுமை மற்றும் ஒருங்கிணைப்பு கவுன்சில் — **RM400 ஆயிரம்**
- குடும்ப வன்முறை வழக்குகள் கையாள்வது — **RM200 ஆயிரம்**
- மசூதி கட்டுமானப் பணியை நிறைவு செய்தல்

#சிலாங்கூர்2022

தொடர் 3

## சிலாங்கூர் பொது சுகாதார வசதிகளை மேம்படுத்துதல்

### RM65 மில்லியன்

- ஆரோக்கியமான சிலாங்கூர் அர்ப்பணிப்பு — **RM46 மில்லியன்**
- ஆரோக்கியமான அரசுப் பணியாளர்கள் — **RM1 மில்லியன்**
- இதய சிகிச்சை திட்டம் — **RM5 மில்லியன்**
- சிலாங்கூர் சுகாதார உதவி — **RM5 மில்லியன்**
- டெங்கு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு — **RM5 மில்லியன்**
- சிலாங்கூர் இலவச பரிசோதனை திட்டம் — **RM1.5 மில்லியன்**
- சிலாங்கூர் சமூக சுகாதார தன்னார்வ திட்டம் — **RM1.5 மில்லியன்**
- புற்று நோய் பரிசோதனைக்கு — **RM1 மில்லியன்**
- குழந்தைகளின் உணவு ஊட்டச்சத்து — **RM1 மில்லியன்**
- SELANGKAH மனநல காப்புக்கு — **RM2 மில்லியன்**
- காசநோய் சிகிச்சைக்கு — **RM800 ஆயிரம்**
- கோவிட் மேலாண்மை 19 — **RM500 ஆயிரம்**
- ஸ்லிம் சிலாங்கூர் — **RM300 ஆயிரம்**
- கண் சுகாதார பரிசோதனை — **RM200 ஆயிரம்**

தொடர் 4

## பசுமையான சூழலை உருவாக்குதல் மற்றும் நிலையான வளர்ச்சியை விரிவுபடுத்துதல்

### RM190.73 மில்லியன்

- தரமான நீர் வழங்கல் திட்டத்தை மேம்படுத்துதல் — **RM100 மில்லியன்**
- குறைபாடு உள்ள வன மீட்பு — **RM10 முதலீடு**
- மின்சார வாகன சார்ஜிங் நிலையம் — **முதலீடு RM10 மில்லியன்**
- நதிக்கரை மேம்பாடு — **RM15.6 மில்லியன்**
- வெள்ளத் தடுப்பு தணிப்பு — **RM9.25 மில்லியன்**
- சுற்றுச்சூழல் நட்பு வடிகால் மேலாண்மை
  - வெள்ள நீர்த்தேக்க குளம் ரவாங் — **RM15 மில்லியன்**
  - வெள்ள நீர்த்தேக்க குளம் கம்பம் புடிமான் — **RM20 மில்லியன்**
- வடிகால் அமைப்பு வளர்ச்சி — **RM9.2 மில்லியன்**
- கடற்கரை மேம்பாடு — **RM5.2 மில்லியன்**
- நுகர்வோர் விழிப்புணர்வு பிரச்சாரம் — **RM880 மில்லியன்**
- மரம் நடும் திட்டம் — **RM800 மில்லியன்**
- பசுமையான சுற்றுப்புற வளர்ச்சி — **RM600 மில்லியன்**
- முக்கிய நதி நிறுவனங்களுக்கான நீர் தர மேம்பாடு
- மறுசுழற்சி மையம்
- ஆற்றின் கரையோர வளர்ச்சி
- சிலாங்கூர் அக்ரோஏசான் திட்டம்
- சிலாங்கூர் ஸ்மார்ட் அக்ரோ பார்க் திட்டம்

தொடர் 5

## ஸ்மார்ட் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் மயமாக்கல் வலுப்படுத்துதல்

### RM316 மில்லியன்

- சிலாங்கூர் எட்வான்ஸ் — **RM300 மில்லியன்**
- Rakan Digital Selangor / PLATS PLATFORMSELANGOR — டிஜிட்டல் பங்குதாரர் மற்றும் சிலாங்கூர் தளம் — **RM6 மில்லியன்**
- ஸ்மார்ட் சிசிடிவி — **RM5 மில்லியன்**
- சிலாங்கூர் பொது தரவு — **RM2 மில்லியன்**
- தரவு பரிமாற்றம் சிலாங்கூர் — **RM2 மில்லியன்**
- சைபர் பாதுகாப்பு பிரிவு — **RM1 மில்லியன்**
- சிலாங்கூர் மின் பணப்பை
- கோ- சிலாங்கூர் செயலி

# காய்கறிகளின் விலை 200 விழுக்காடு அதிகரிப்பு

## பினாங்கு பயனீட்டாளர் சங்கம்




ஜார்ஜ் டவுன் – அண்மைய வாரங்களாக காய்கறிகளின் விலை 200 விழுக்காடு வரை உயர்ந்துள்ளதாக பினாங்கு பயனீட்டாளர் சங்கம் கூறியது.

இந்த விலையேற்றத்தை தடுக்க உடனடி நடவடிக்கை எடுக்குமாறு உள்நாட்டு வாணிக பயனீட்டாளர் விவகார அமைச்சு மற்றும் ஃபாமா எனப்படும் கூட்டரசு விவசாய சந்தை வாரியத்தை பினாங்கு பயனீட்டாளர் சங்கம் வலியுறுத்தியுள்ளது. சந்தையில் விற்கப்படும் சில காய்கறிகளின் விலை உயர்ந்துள்ளது சங்கம் மேற்கொண்ட ஆய்வில் தெரியவந்துள்ளதாகவும் காய்கறிகளின் விலை தொடர்ந்து உயரும் என்று விநியோகஸ்தர்கள் மற்றும் மொத்த வியாபாரிகள் கூறியதாக வியாபாரிகள் அந்த ஆய்வின் போது தெரிவித்தனர் என்றும் சங்கத்தின் தலைவர் மொஹிடின் அப்துல் காதர் கூறினார். கடந்த இரண்டு வாரங்களாக காலிஃபிளவர், சிறு கீரை ப்ரோக்கோலி, கடுகுக்கீரை, பீன்ஸ், முட்டைக்கோஸ், சிவப்பு மிளகாய், பச்சை மிளகாய் ஆகிய 8 வகையான காய்கறிகளின் விலை உயர்ந்து வருவதை எங்கள் ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது என்று அவர் அறிக்கை ஒன்றில் தெரிவித்தார். சிறுகீரை ஒரு கிலோ 3.00 வெள்ளியிலிருந்து 9.00 வெள்ளி வரை 200 சதவீதமாக உயர்ந்துள்ளது. காலிஃபிளவர் ஒரு கிலோவுக்கு 7.00 வெள்ளியாக இருந்தது, தற்போது அது கிலோ 16.00 அதிகரித்துள்ளது. என்றார் அவர். அது மட்டுமின்றி, கிலோ 8.00 வெள்ளியாக இருந்த ப்ரோக்கோலியின் விலை 150 சதவீதம் அதிகரித்து 20.00 வெள்ளியாகவும் கடுகுக்கீரை 5.00 வெள்ளியிலிருந்து 8.00 வெள்ளியாகவும் (60 சதவீதம்), பீன்ஸ் 8.00 வெள்ளியிலிருந்து 15.00 வெள்ளியாகவும் (88 சதவீதம்), முட்டைக்கோஸ் 4.00 வெள்ளியிலிருந்து 6.00 வெள்ளியாகும் (50 சதவீதம்), சிவப்பு மிளகாய் 13.00 வெள்ளியிலிருந்து 19.00 வெள்ளியாகவும் (46 சதவீதம்) மற்றும் பச்சை மிளகாய் 10.00 வெள்ளியிலிருந்து 14.00 வெள்ளியாகவும் (40 சதவீதம்) உயர்ந்துள்ளது என்றார் அவர். காய்கறி விலை உயர்வு குறைந்த வருமானம் பெறும் பிரிவினருக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளதால், சட்டத்தை மீறும் வியாபாரிகள் அல்லது மொத்த வியாபாரிகள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

# சிலாங்கூர் தொழிலாளர்களுக்கான வீடமைப்பு தொகுதி



ஷா ஆலம் ; சிலாங்கூர் தொழிலாளர்களுக்கான வீடமைப்பு தொகுதியை நிர்மாணிக்கும் முயற்சிகளை PKNS மூலம் சிலாங்கூர் தொடங்க விருக்கிறது. முழுமையான, முறையான, சிறந்த நிர்வாகம் மற்றும் பாதுகாப்புடன் வீடமைப்பு வசதிகளை ஏற்படுத்தும் அடிப்படை மனித உரிமைக்கு ஏற்ப இந்த திட்டம் அமைகிறது. புதிய பொருளாதார துறைகளை வலுப்படுத்துவதன் மூலம் வெளிநாட்டு தொழிலாளர்கள் மீதான தவறான புரிந்துணர்வை குறைக்க முடியும் தவறான புரிந்துணர்வை குறைக்க முடியும். இதன்வழி சமூக மற்றும் சுகாதார விவகாரங்களை தீர்ப்பதோடு கோவிட் -19 தொற்று காலத்திற்கு பிறகு பொருளாதார துறைகளை துரிதப்படுத்த முடியும். 1990 ஆம் ஆண்டின் குறைந்த பட்ச , தரமான வீடமைப்பு, தங்கும் வசதி மற்றும் ( 446 சட்டத்தை ) நிறைவு செய்யும் முயற்சியாக இது அமைகிறது. இத்திட்டத்திற்காக இதுவரை 145 ஏக்கர் நிலம் அடையாளம் காணப்பட்டுள்ளது. சிலாங்கூர் அரசாங்கத்திற்கு சொந்தமான 59 ஏக்கர் நிலமும், சிலாங்கூர் மேம்பாட்டு கழகம் என்னும் P.K.N.S 86 ஏக்கர் நிலமும் அடையாளம் கண்டுள்ளன. இதன்வழி 60,000 தொழிலாளர்களுக்கான வீடுகளை உருவாக்க முடியும். பெட்டாலிங், கிள்ளான், உலுலங்காட், கோம்பாக், கோலா லங்காட், கோலாசிலாங்கூர், உலு சிலாங்கூர், சபா பெர்ணம் ஆகிய இடங்களில் தொழிலாளர் குடியிருப்பு வசதிக்கான நிலம் அடையாளம் காணப்பட்டுள்ளன. பொது மற்றும் தனியார் துறையின் ஒத்துழைப்போடு மேற்கொள்ளப்படும் இந்திட்டத்திற்கு தொடக்க கட்டமாக 50 லட்சம் ரிங்கிட் ஒதுக்கப்பட்டுள்ளது.

# அடுத்தாண்டில் ஒவ்வொரு தொகுதியிலும் விளையாட்டு வசதிகள் ஏற்படுத்தப்படும்



ஷா ஆலம் – அடுத்தாண்டில் விளையாட்டு தொடர்புடைய 60 திட்டங்கள் புனரமைப்பு செய்யப்படும் அதே வேளையில் ஒவ்வொரு தொகுதியிலும் விளையாட்டு வசதிகள் ஏற்படுத்தப்படும் என்று சிலாங்கூர் மாநில விளையாட்டு மன்றத்தின் நிர்வாக இயக்குநர் முகமது நிஸாம் மர்ஜூக்கி கூறினார்.

நாற்பது லட்சம் வெள்ளி கூடுதல் ஒதுக்கீட்டைக் கொண்டு புட்சால், பூப்பந்து, கைப்பந்து, மற்றும் செப்பக்தக்ராவ் விளையாட்டு திடல்கள் சீரமைக்கப்படும் என்று அவர் தெரிவித்தார்.

கைவசம் உள்ள நிதி போதுமானதாக இல்லாத நிலையில் மாநில அரசின் இந்த ஒதுக்கீடு எங்களுக்கு பெரும் மகிழ்ச்சியை அளிக்கிறது. நிறைய சீரமைப்பு பணிகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது என்று அவர் சொன்னார்.

ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதியிலும் குறிப்பாக கிராமங்களில் உள்ள சீரமைப்பு செய்ய வேண்டிய நிலையிலுள்ள விளையாட்டு வசதிகளை முதலில் அடையாளம் காணவிருக்கிறோம் என்று அவர் குறிப்பிட்டார்.

இவ்வாண்டில் இருபது லட்சம் வெள்ளி செலவில் விளையாட்டு வசதிகளை தரம் உயர்த்தும் 40 திட்டங்களை தாங்கள் மேற்கொண்டதாகவும் அவற்றில் பெரும்பாலானவை முழுமையடைந்து விட்டதாகவும் அவர் கூறினார்.

விளையாட்டு வசதிகளை நிர்மாணிக்கும் மற்றும் பழுதுபார்க்கும் பணிக்காக அடுத்தாண்டு வரவு செலவுத் திட்டத்தில் 40 லட்சம் வெள்ளி ஒதுக்கப்படுவதாக மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி அறிவித்துள்ளார்.

# ஆலயங்களைக் காத்த ஆலயம்

# கெர்லிங், அருள்மிகு ஸ்ரீ சுப்பிரமணியர் ஆலயம்



தைப்பூசம் என்றவுடன் நினைவுக்கு வரும் முக்கிய முருகப் பெருமான் திருத்தலங்களில் ஒன்று கெர்லிங், அருள்மிகு ஸ்ரீ சுப்பிரமணியர் ஆலயமாகும். சிலாங்கூரில் பத்துமலை திருத்தலம் மற்றும் கோல சிலாங்கூர் ஸ்ரீ சுப்பிரமணியர் ஆலயத்தை அடுத்து தைப்பூசத்தின் போது அதிக பக்தர்கள் திரளும் ஆலயமாக இந்த திருத்தலம் விளங்குகிறது. மலேசியாவிலுள்ள அனைத்து ஆலயங்களுக்கும் வரலாறு நிச்சயம் உண்டு. அந்த வகையில் இந்த ஆலயமும் தனக்கென வரலாற்றைக் கொண்டுள்ளது.

கோலாலம்பூர்– ஈப்போ சாலையில் கெர்லிங் பட்டிணத்தில் அமைந்துள்ளது இந்த ஆலயம். சுங்கை சிலாங்கூர் ஆற்றோரம் சுமார் இரண்டரை ஏக்கர் நிலப்பரப்பில் எழில்மிகு தோற்றத்துடன் காட்சியளிக்கும் இந்த ஆலயத்திற்கு தனித்துவம் தரும் அம்சங்களில் ஒன்றாக விளங்குகிறது அங்கு அமைந்துள்ள தாமரைத் தடாகமாகும்.

இந்த ஆலயத்தின் தோற்றம், எதிர்நோக்கிய இடர்கள் மற்றும் அதன் வளர்ச்சி குறித்து “சிலாங்கூர் இன்று“ பத்திரிக்கைக்காக நம்மிடம் விவரிக்கிறார் ஆலயத் துணைத் தலைவர் இளங்கோவன் மலையாண்டி. இந்த ஆலயம் கடந்த 1945 ஆம் ஆண்டு பழனிவேல் கங்காணி என்பரால் தோற்றுவிக்கப்பட்டதாக வரலாற்றுக் குறிப்பு கூறுகிறது. அப்போது செங்கல் ஒன்றினை நிறுத்தி வழிபாடு நடத்தப்பட்ட இவ்வாலயம் காலப்போக்கில் பலரது முயற்சியால் முழு அளவிலான ஆலயமாக வடிவம் பெற்றது. கடந்த 1960 ஆம் ஆண்டில் ஆலயத்திற்கு அரசாங்கத்தின் பதிவு கிடைக்கப்பெற்ற வேளையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட ஆலயத்திற்கு முதலாவது கும்பாபிஷேகம் 1963 ஆம் ஆண்டு நடத்தப்பட்டது. சுமார் 15 ஆண்டுகள் ஆலயத்தில் வழிபாடுகளும் பூஜைகளும் சீராக தங்கு தடையின்றி நடைபெற்று வந்தது.

### முருகன் வாழும் கெர்லிங் திருகோயில் குற்றவாளிகளை ஒழித்தது

அதன் பின்னர் ஏற்பட்ட எதிர்பாராத அசம்பாவிதங்கள் ஆலய வரலாற்றில் கருப்பு அத்தியாயத்தைப் பதித்து விட்டுப் போனது. கும்பல் ஒன்று, இரவு வேளைகளில் சிலாங்கூர் மாநிலம் முழுவதிலும் ஆலயகளில் புகுந்து சிலைகளை உடைத்து வந்தது, பல போலீஸ் புகார்கள். ஆனால், குற்றவாளிகளின் கைவரிசையை இக்கோயிலில் காட்டும் பொழுது தெய்வசெயலால் அவர்களின் கைவரிசைக்கு முடிவு கட்டப் பட்டது. வலி மிகுந்த இந்த சம்பவம் “மலேசியா ஆலயங்களை பாதுகாத்த கவசம் என்ற ஒற்றை வரி இந்த ஆலயத்தின் புகழை காலத்திற்கும் நிலைத்து நிற்க வைக்கும். அந்த சம்பவத்திற்கு பின், சுமார் 10 ஆண்டுகள் ஸ்தம்பித்துப் போன ஆலய நடவடிக்கைகளுடன் பதிவும் ரத்தானது. பின்னர் ஆலய நிர்வாகத்தினரின் கோரிக்கையை ஏற்று அரசாங்கம் 1986 ஆம் ஆண்டில் ஐவர் கொண்ட குழுவிடம் ஆலய நிர்வாகத்தை ஒப்படைத்தது. ஆலயம் புரனமைப்பு செய்யப்பட்டு உடைந்த சிலைகளுக்கு மாற்றாக தமிழகத்திலிருந்து புதிய சிலைகள் தருவிக்கப்பட்டு ஸ்தாபனம் செய்யப்பட்டது. மறு சீரமைப்பு பணிக்குப் பின்னர் கடந்த 1987 ஆம் ஆண்டு இரண்டாவது கும்பாபிஷேக விழா வெகு விமரிசையாக கொண்டாடப்பட்டது என்று இளஙகோவன் குறிப்பிட்டார்.

### ஆலயம் மறு சீரமைப்பு

அதன் பின்னர் ஆலயத்தில் வழிபாடுகளும் பூஜை புனஸ்காரங்களும் தொடர்ந்து சீராக நடைபெற்று வருகிறது. இடைப்பட்ட காலத்தில் ஆலயத்தின் மூலஸ்தான விமானம் உள்பட கட்டிடம் பாதுகாப்பற்ற நிலையில் காணப்பட்டதைத் தொடர்ந்து அதனை இடித்து புதிய ஆலயத்தை நிர்மாணிக்க நிர்வாகத்தினர் முடிவெடுத்தனர். சிலாங்கூர் மாநில அரசின் பெரிய அளவலான நிதியுதவி, கொடை நெஞ்சர்கள், பக்தர்கள், மற்றும் சுற்று வட்டார மக்கள் வழங்கிய நன்கொடையின் மூலம் இந்த ஆலயம் அழகிய திருத்தலமாக எழுந்திருளியது என்று அவர் சொன்னார். கடந்த 2012 ஆம் ஆண்டில் தொடங்கிய இந்த ஆலயத்தின் கட்டுமானப் மூன்று ஆண்டுகளில் முற்றுப் பெற்று கடந்த 2015 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் கும்பாபிஷேகம் நடத்தப்பட்டது என இளங்கோவன் குறிப்பிட்டார். ஆலய முகப்பில் அலங்கார வளைவு, தாமரைத் தடாகம், அலுவலகம், குருக்கள் தங்கும் அறை, இரத அறை, வாகன நிறுத்துமிடம் என பல்வேறு வசதிகளை இந்த ஆலயம் கொண்டிருக்கிறது.

### ஆலயத்தின் சிறப்பு

கெர்லிங் வட்டாரத்திலுள்ள இந்துக்களின் பிரதான வழிபாட்டுத் தலமாக விளங்கி வரும் இந்த ஆலயம் ஒவ்வோராண்டும் தைப்பூசத்தின் போது பெரும் எண்ணிக்கையிலான பக்தர்கள் கூடும் தலமாகவும் விளங்குகிறது. தைப்பூச விழாவின் முருகப்பெருமானை தரிசிப்பதற்கும் நேர்த்திக் கடனைச் செலுத்துவதற்கும் 15,000த்திற்கும் மேற்பட்ட பக்தர்கள் இங்கு திரள்வர். முருகப் பெருமான், விநாயகர், மாரியம்மன், நவக்கிரகம், சிவன், ஐயப்பன் ஆகிய திருமூர்த்திகளுக்கு சன்னிதானங்களை இந்த ஆலயம் கொண்டுள்ளது. இது தவிர, கருமக்கிரியை செய்வதற்கு ஆற்றோரத்தில் வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன என்று இங்கோவன் கூறினார். இது தவிர, கெர்லிங் சாலையின் முதலாவது மைலில் உள்ள இந்து இடுகாட்டை பராமரிக்கும் பொறுப்பையும் இந்த ஆலயமே ஏற்றுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். சுமார் ஒன்றரை ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ள இந்த இடுகாட்டில் பிரேதங்களை தகனம் செய்வதற்கான தகன மேடையும் அமைக்கப்பட்டுள்ளது.

ஆலயத்தில் தேவாரம் மற்றும் பரத நாட்டிய வகுப்புகளையும் இதர சமய மற்றும் சமூக நடவடிக்கைகளையும் மேற்கொள்வதற்கான திட்டங்கள் கோவிட்–19 நோய்த் தொற்று பரவல் காரணமாக செயல்படுத்த முடியாத நிலையில் உள்ளதாக அவர் சொன்னார்.

### எதிர்காலத் திட்டம்

இந்த ஆலயத்தில் அனைத்து வசதிகளையும் கொண்ட திருமண மண்டபத்தை நிர்மாணிக்கும் திட்டத்தை ஆலய நிர்வாகத்தினர் கொண்டுள்ளனர். சுமார் பத்து லட்சம் வெள்ளி செலவிலான இத்திட்டத்திற்கு நிதி திரட்டுவதற்கும் மாநில மற்றும் மத்திய அரசுகளிடமிருந்து உதவி பெறுவதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வரும் அதே வேளையில் சொந்தமாக நிதி திரட்டுவதிலும் தீவிரம் காட்டி வருகின்றனர்.

இது தவிர, சிவன் ஆலயம் மற்றும் ஐயப்பன் சன்னிதானத்தை புதுப்பித்து கட்டுவதற்கும் ஆலய இடுகாட்டு நிலத்தைச் சுற்றிலும் வேலி அமைப்பதற்கும் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என் இளங்கோவன் தெரிவித்தார்.

# புதிய இயல்பில் தீபாவளி பொது உபசரிப்பினை செந்தோசா சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் குணராஜ் ஜோர்ஜ் நடத்தினார்.





ஷா ஆலம் – செந்தோசா சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் குணராஜ் ஜோர்ஜ் தீபாவளி பொது உபசரிப்பினை கடந்த ஆண்டைப் போன்று இவ்வாண்டும் புதிய இயல்பில் தொகுதி மக்களுடன் கொண்டாடினார். இருப்பினும், அனைவரும் கூடல் இடைவெளியைக் கடைபிடிப்பது, முகக்கவசம் அணிவது போன்ற எஸ்.ஓ.பி. விதிமுறைகளை முறையாக கடைபிடிக்க வேண்டும் என்று அவர் கூறினார். தீபாவளி தின கொண்டாட்டமானது செந்தோசா சட்டமன்ற தொகுதி மக்களிடையே ஒற்றுமையை ஏற்படுத்தவும் மக்களின் நல்லெண்ண உணர்வை மேலும் வளர்க்கிறது. இந்த கொண்டாட்டம், செந்தோசா நண்பர்கள், சமூகத்தின் பல்வேறு துறைகளை சேர்ந்தவர்கள், அரசு நிறுவனங்கள், தனியார் துறையினரிடையே மகிழ்ச்சியை ஏற்படுத்துகிறது. சுமார் 1500 பேருக்கு நாசி பிரியாணி, சிக்கன் கறி, மெஷ் ரொட்டி, ரொட்டி கேக், முறுக்கு, பலவித இனிப்புகள், ஜெல்லி, பாக்ஸ் வாட்டர், ஐஸ்கிரீம், ஆப்பிள் என பல்வேறு தீபாவளி உணவுகள் தயாரிக்கப்பட்டன. மக்கள் குடும்பத்துடன் கார், மோட்டார் சைக்கிள்களிலும், சிலர் நடந்து வந்தும் தீபாவளி அன்பளிப்புகளை வாங்கிச் சென்றனர். பட்டாசு வெடிக்கும்போது தீபாவளி சூழல் ஒளியுடனும் மகிழ்ச்சியுடனும் இருந்தது. கவுன்சில் உறுப்பினர்கள், செந்தோசா இந்திய சமூகத் தலைவர், தொகுதியில் செயல்படும் பல்வேறு தொண்டு, சமய, இளைஞர் மற்றும் கட்சியின் துணைப் பிரிவுகளின் ஒத்துழைப்புடன் நடைபெற்ற நிகழ்ச்சி வெற்றியடைவதற்கு உழைத்த அனைவருக்கும் செந்தோசா சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் குணராஜ் ஜோர்ஜ் நன்றி தெரிவித்துக் கொண்டார்




## மூத்த குடிமக்கள் நட்புறவுத் திட்டம் “இல்திசாம் சிலாங்கூர் பெண்யாயாங்“ என பெயர் மாற்றம்


ஷா ஆலம் – கடந்த 13 ஆம் ஆண்டுகளாக செயல்பட்டு வந்த எஸ்.எம்.யு.இ. எனப்படும் மூத்த குடிமக்கள் நட்புறவுத் திட்டம் இல்திசாம் சிலாங்கூர் பென்யாயாங்“ திட்டம் என பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் அமலாக்கத்தை மாநில அரசு தொடர்ந்து கண்காணித்து வந்ததோடு காலத்தின் தேவைக்கேற்ப புதிய அணுகுமுறைகளையும் புகுத்தி வந்ததாக மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கூறினார். இந்த சமூக பாதுகாப்புத் திட்டத்தை நிலைநிறுத்தும் அதேவேளையில் மக்களுக்கு ஆக்ககரமான முறையில் சேவையாற்றுவதற்கு ஏதுவாக அதன் தரத்தையும் மேம்படுத்தப்பட்டு வருவதாக அவர் குறிப்பிட்டார். இதன் அடிப்படையில் இத்திட்டங்கள் யாவும் ஒருங்கிணைக்கப்பட்டு இல்திசாம் சிலாங்கூர் பென்யாயாங் (சிலாங்கூர் பரிவு அர்ப்பணிப்புத் திட்டம்) என புதிய பெயர் சூட்டப்பட்டுள்ளதாக அவர் சொன்னார். சமூக பாதுகாப்பு ஒருங்கமைப்பாக விளங்கக்கூடிய இத்திட்டத்தின் வழி அனைத்து சமூக நலத் திட்டங்களும் ஒருங்கிணைக்கப்படும் எனக் கூறிய அவர், இந்நோக்கத்திற்காக 30 கோடியே 5 லட்சத்து 19 ஆயிரம் வெள்ளி அடுத்தாண்டில் ஒதுக்கப்படுகிறது என்றார்.

# மக்களின் நல்வாழ்வுக்கு வித்திடும் 2022ம் ஆண்டு சிலாங்கூர் மாநில பட்ஜெட்



கிள்ளான் – செந்தோசா சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் குணராஜ் ஜோர்ஜ் தீபாவளி பொது உபசரிப்பை செந்தோசாவில் கடந்த சனிக்கிழமை புதிய இயல்பில் நடத்தினார். அந்நிகழ்வில் 2022 ம் ஆண்டின் சிலாங்கூர் மாநில பட்ஜெட் குறித்த கேள்விக்கு பதிலளிக்கையில் . மக்களின் நல்வாழ்வை மனதில் கொண்டு தயாரிக்கப்பட்டது 2022 ம் ஆண்டின் சிலாங்கூர் மாநில பட்ஜெட் என்றார். மக்கள் நோய் தொற்று பாதிப்பில் இருந்த விரைவில் வெளிவர அவர்களுக்கு தேவைப்படும் பல அம்சங்களை அது கொண்டுள்ளது என்றார் அவர். இந்த பட்ஜெட், மக்கள் நலன், அரசாங்க வரி விலக்கு அல்லது கட்டண ஒத்திவைப்பு, மருத்துவ உதவி, கல்வி உதவி, வேலை இழந்தவர்களுக்கு உதவி, பெற்றோர்களை இழந்த குழந்தைகளுக்கான அரவணைப்பு, நடமாட்ட கட்டுப்பாடு காலத்தில் தடையின்றி வாழ்வை நகர்த்தி செல்வதற்கு பேருதவியாக இருந்த இலக்கவியல் போன்ற பல அணுகுமுறைகளைக் கொண்டுள்ளது. தமிழ்ப்பள்ளிகள், இந்து ஆலயங்கள், பொது இயக்கங்கள், மன்றங்களுக்கான ஆண்டு மானியங்களுடன், இந்தியர்களின் தொழில் துறைகளும் மீண்டும், மீட்சி பெற சித்தம், ஐ-சீட் என இரண்டு பிரிவுகள் இந்திய தொழில் முனைவோர்களை குறியாக கொண்டு தோற்றுவிக்கப்பட்டதற்கான ஒதுக்கீடுகளும் உண்டு. மக்கள் அவர்களுக்கு தேவைப்படும் உதவிகளுக்காக அந்தந்த சட்டமன்ற உறுப்பினர்களை நாடலாம், உதவி திட்டங்களுக்கான தகவல்களை இணையத்தில் பெறலாம், அதற்கான தொடர்பு மையங்களுடன் தொடர்புக் கொண்டு, தொலைபேசி வாயிலாகவும் தொடர்புக்கொண்டு விவரங்களை பெறலாம் என்றார் செந்தோசா சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் குணராஜ் ஜோர்ஜ் தீபாவளி பொது உபசரிப்பினை கடந்த ஆண்டைப் போன்று இவ்வாண்டும் புதிய இயல்பில் தொகுதி மக்களுடன் கொண்டாடினார்.

# செஹாட் சிலாங்கூர் உதவித் திட்டத்திற்கு 50 லட்சம் ஒதுக்கீடு



ஷா ஆலம் : அடுத்த ஆண்டிற்காக Bantuan Sihat Selangor எனப்படும் செஹாட் உதவித் திட்டத்திற்காக சிலாங்கூர் அரசாங்கம் 50 லட்சம் ரிங்கிட்டை ஒதுக்கியுள்ளது. 2009ஆம் ஆண்டு முதல் அமல்படுத்தப் பட்டுவரும் செஹாட் உதவித் திட்டத்தினால் தகுதிபெற்ற 4,000 பேர் இதுவரை பயன் அடைந்துள்ளனர். அடுத்த ஆண்டு முதல் இரத்த சோகை நோயாளிகள், புற்றுநோயாளிகள் மற்றும் கடும் நோய்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் செஹாட் உதவித் திட்டம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. மேலும் போக்குவரத்திற்கான செலவு, சத்துணவு, இரத்த சுத்திகரிப்பு (டைலசிஸ்),விழிப்படல அறுவை சிகிச்சை ( கட்டெரக்) , சிறு அறுவை சிகிச்சை மற்றும் மருத்துவ உதவி சாதனங்கள் வாங்குவதற்கும் இத்திட்டத்தில் நிதியுதவி வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் படுத்த படுக்கையாக இருக்கும் நோயாளிகள் மற்றும் மாற்று திறனாளிகள் சிகிச்சை பெறுவதற்கு மருத்துவ உதவியாளர்களின் தேவை என கேட்டுக் கொள்வோரின் விண்ணப்பங்களையும் மாநில அரசாங்கம் பரிசீலிக்கும் .

# சிலாங்கூர் சட்ட உதவி நிதி உருவாக்கம்



ஷா ஆலம் – சட்ட உதவி கிடைக்க முடியாத அளவுக்கு ஒடுக்கப்பட்ட அல்லது நிராகரிக்கப்பட்ட தரப்பினருக்கு உதவிக் கரம் நீட்டும் வகையில் சிலாங்கூர் மாநில அரசு சட்ட உதவி நிதித் திட்டத்தை அறிமுகப்படுத்துகிறது. குறைந்த வருமானம் பெறும் பி40 தரப்பினர் எதிர்நோக்கும் குடும்ப வன்முறை மற்றும் வேலை நீக்கம் போன்ற பிரச்சனைளுக்கு சட்ட உதவி வழங்குவதை இந்த நிதித் திட்டம் நோக்கமாக கொண்டுள்ளது. சிலாங்கூர் வழக்கறிஞர் மன்றம் மற்றும் சிலாங்கூர் சட்ட உதவி மையத்தின் உதவியுடன் அமல்படுத்தப்படும் இத்திட்டத்திற்கு 10 லட்சம் வெள்ளி 2022 வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்படுவதாக மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கூறினார்.

# சுகாதார பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் 90,000 பேர் பயன் பெறுவர்



ஷா ஆலம் – “பெடுலி சேஹாட்“ திட்டத்திற்கு பதிலாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள “இல்திசாம் சிலாங்கூர் சேஹாட்“ திட்டத்தின் வாயிலாக 90,000 பேர் சுகாகார பாதுகாப்பை பெறுவர் என எதிர்பார்க்கப்படுகிறது. அடுத்தாண்டில் அமலுக்கு வரும் இத்திட்டம் 4 கோடியே 60 லட்சம் வெள்ளி நிதியை உள்ளடக்கியுள்ளது. அந்த நிதி ஒதுக்கீட்டில் பத்து லட்சம் வெள்ளித் தொகை அரசு ஊழியர்களுக்கான இல்திசாம் சேஹாட் சிலாங்கூர் திட்டத்தின் கிரேட் 44 மற்றும் அதற்கும் கீழ்ப்பட்ட அரசு ஊழியர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளதாக மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கூறினார். தற்போது அமலில் இருந்து வரும் காப்புறுதி திட்டத்தில் 85,000 பேர் பயன் பெற்று வருவதாக கூறிய அவர், கடும் நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் படுத்த படுக்கையாக இருப்பவர்களை இலக்காக கொண்டு இந்த எண்ணிக்கை மேலும் 5,000 அதிகரிக்கப்படும் என்று அவர் தெரிவித்தார். தகுதி பெற்றவர்கள் மட்டுமே இந்த திட்டத்தில் பயன்பெறுவதை உறுதி செய்யும் வகையில் இதற்கான தகுதி மற்றும் நிபந்தனைகள் மேலும் சீரமைக்கப்படும் என்று அவர் குறிப்பிட்டார்.

# காசநோய் சிகிச்சைத் திட்டத்திற்கு எட்டு லட்சம் வெள்ளி ஒதுக்கீடு



ஷா ஆலம் — சிலாங்கூர் அரசு 2022 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் காச நோய் சிகிச்சைக்கு எட்டு லட்சம் வெள்ளியை ஒதுக்கியுள்ளது. காச நோயின் அபாயம் குறித்து மாநில மக்கள் மத்தியில் இன்னும் போதுமான அளவு விழிப்புணர்வு இல்லை என்று மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கூறினார். அடுத்தாண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்படும் இந்த நிதியின் மூலம் மாநிலத்திலுள்ள சுமார் 1,000 காசநோயாளிகளுக்கு முறையான சிகிச்சை வழங்க முடியும் என்று

# எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கான மானியம் 400,000 லட்சம் வெள்ளியாக அதிகரிப்பு



சிலாங்கூர் மாநிலத்திலுள்ள எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் மானியத் தொகை கிட்டத்தட்ட மூன்று மடங்கு அதிகரிக்கப்பட்டுள்ளது. அவர்களுக்கு வழங்கப்பட்டு வந்த 150,000 வெள்ளி மானியத் தொகை அடுத்தாண்டு முதல் 400,000 வெள்ளியாக உயர்த்தப்படுவதாக மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கூறினார். எதிர்க்கட்சி உறுப்பினர்கள் மத்திய அரசின் கூட்டரசு ஒருங்கிணைப்பு நிதியிலிருந்து வருடாந்திர மானியமாக 400,000 வெள்ளியை பெறுகின்றனர். மாநில அரசு வழங்கும் 400,000 வெள்ளியுடன் சேர்த்து அவர்களுக்கான மானியம் 800,000 வெள்ளியாக உயர்வு காண்கிறது என்றார் அவர். மலேசியாவின் முன்னோடி மாநிலம் என்ற சிலாங்கூரின் நிலைப்பாட்டிற்கு ஏற்பவும் அரசியல் வேறுபாடின்றி மக்களுக்கு உதவும் மாநில அரசின் கோட்பாட்டிற்கு ஏற்பவும் இந்நடவடிக்கை அமைவதாக அவர் தெரிவித்தார். மாநில அரசுக்கு ஆதரவாக இருக்கும் சுயேச்சை வேட்பாளர்களுக்கான மானியம் 500,000 வெள்ளியாக உயர்த்தப்படும் என்றும் இந்த நிதியை அரசினா நியமிக்கப்படும் ஒருங்கிணைப்பாளர் நிர்வகிப்பார் என்றும் அவர் சொன்னார். அதே சமயம், மத்திய அரசு வழங்கும் மானியம் தவிர்த்து எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு கூடுதலாக 50,000 வெள்ளி வழங்கப்படும். அலுவலகங்களை பராமரிப்பதற்கு இந்த நிதியை அவர்கள் பயன்படுத்தலாம் என்றார் அவர்.

# மக்கள் நலன் காக்கும் வரவு செலவுத் திட்டம்

## சட்டமன்ற உறுப்பினர்கள் பாராட்டு

ஷா ஆலம் – வரும் 2022 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தில் சமூக நலன் மற்றும் அடிப்படை வசதிகள் மேம்பாட்டிற்கு அதிக முக்கியத்துவம் வழங்கியதன் மூலம் மாநில அரசு மக்கள் நலனை தொடர்ந்து பாதுகாத்து வருகிறது.

பொது மக்கள் எதிர்பார்த்த இத்தகைய திட்டங்கள் வாயிலாக மக்களின் பொருளாதாரத்தை மேம்படுத்துவற்கு உதவ முடியும் என்று கோலக் கிள்ளான் சட்டமன்ற உறுப்பினர் அஸ்மிஸான் ஜமான் ஹூரி சொன்னார். பொது மக்களின் எதிர்பார்ப்புக்கேற்ப தரம் உயர்த்தப்பட்ட திட்டங்களில் கிஸ் எனப்படும் ஸ்மார்ட் சிலாங்கூர் அன்னையர் பரிவுத் திட்டம், கிஸ்-ஐ.டி. எனப்படும் தனித்து வாழும் அன்னையர் பரிவுத் திட்டம் ஆகியவையும் அடங்கும். இத்திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு அதிகரிக்கப்பட்டுள்ளதோடு



பயனாளிகளின் எண்ணிக்கையும் உயர்த்தப்பட்டுள்ளது என்றார் அவர்.

இதனிடையே, அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்கு இந்த வரவு செலவுத் திட்டத்தி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதை தாம் வரவேற்பதாக மோரிப் சட்டமன்ற உறுப்பினர் ஹஸ்னுள் பகாருடின் கூறினார்.

சுமார் ஒரு கோடி வெள்ளி செலவில் சுங்கை கெலாம்பு-கெந்திங் சென்யன் சாலை இணைப்புத் திட்டத்தின் வழி அப்பகுதியில் மேம்பாட்டு நடவடிக்கைகள் துரிதமடையும் என அவர் குறிப்பிட்டார்.

# தொகுதிக்கான மானியம் அதிகரிப்பு

## எதிர்க்கட்சித் தலைவர் பாராட்டு

ஷா ஆலம் – சிலாங்கூர் மாநிலத்திலுள்ள எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் மானியத் தொகையை அதிகரிக்கும் மாநில அரசின் முடிவுக்கு எதிர்க்கட்சித் தலைவர் டத்தோ ரிஸாம் இஸ்மாயில் பாராட்டுத் தெரிவித்துள்ளார். தற்போது 150,000 வெள்ளியாக இருக்கும் வருடாந்திர மானியத்தை அடுத்தாண்டில் 400,000 லட்சம் வெள்ளியாக உயர்த்தும் மாநில அரசின் இம்முடிவு “ஆண்மைத்தனமானது“ என அவர் வர்ணித்தார். மத்திய அரசின் கூட்டரசு ஒருங்கிணைப்பு பிரிவிடமிருந்து நாங்கள் 400,000 வெள்ளியைப் பெற்று வருகிறோம், அதே சமயம் மாநில அரசும் எங்களுக்கு 400,000 வெள்ளியை மானியமாக வழங்குகிறது. ஆகவே, நிதி ஒதுக்கீடு தற்போது சமநிலையை எட்டியுள்ளது என்றார் அவர். மந்திரி புசார் மாநில சட்டமன்றத்தில் வரவு செலவுத் திட்டத்தை தாக்கல்



செய்யும் நிகழ்வுக்குப் பின்னர் செய்தியாளர்களைச் சந்தித்த போது அவர் இதனைத் தெரிவித்தார்.

சபாக் பெர்ணம் பகுதியை மேம்படுத்தும் திட்டத்தை தாம் வரவேற்பதாக கூறிய அவர், தேசிய முன்னணி தோல்வி கண்டது முதல் இப்பகுதி பின்தங்கிய நிலையில் உள்ளதாக குறிப்பிட்டார். இத்தகைய திட்டத்திற்காக நாங்கள் நீண்ட நாட்களாக காத்திருந்தோம். இப்பகுதியில் மேம்பாட்டுத் திட்டத்தை அறிவித்த தற்காக மாநில அரசுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறோம் என்று ஆயர் தாவார் சட்டமன்ற உறுப்பினருமான அவர் சொன்னார்.

# இளம் தலைமுறையினர் மற்றும் விளையாட்டுத்

## துறையின் மேம்பாட்டிற்கு வெ.1.44 கோடி ஒதுக்கீடு



ஷா ஆலம் – இளம் தலைமுறையினர் மற்றும் விளையாட்டுத் துறையின் மேம்பாட்டை உறுதி செய்வதற்காக 2022 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தில் 1 கோடியே 44 லட்சத்து 90 ஆயிரம் வெள்ளி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மாநிலத்தில் விளையாட்டு துறை மற்றும் இளைய தலைமுறையினரின் மேம்பாட்டில் அரசாங்கம் முழு கடப்பாடு கொண்டுள்ளதை இந்த ஒதுக்கீடு புலப்படுத்துவதாக மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கூறினார். இந்நோக்கத்தை அடைவதை உறுதி செய்வதற்காக 2014 ஆம் ஆண்டு சிலாங்கூர் இளைஞர் கொள்கையை தரம் உயர்த்தி 2020 ஆம் ஆண்டு சிலாங்கூர் இளைஞர் கொள்கை அறிமுகம் செய்யப்பட்டுள்ளதாக அவர் சொன்னார். அடுத்த பத்து ஆண்டுகளில் இளம் தலைமுறையினரின் மேம்பாட்டிற்கான இலக்கை தீர்மானிப்பதற்கான வழிகாட்டியாக இந்த கொள்கை விளங்கும் என்று அவர் தெரிவித்தார்.

# பயணக் கட்டணங்களை உடனடியாக குறைப்பீர்

## விமான நிறுவனங்களுக்கு கோரிக்கை




புத்ரா ஜெயா – பயணக் கட்டணங்களை உடனடியாக குறைக்கும்படி நாட்டிலுள்ள விமான நிறுவனங்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளன. அரசாங்கத்தின் தலையீடின்றி கட்டணக் குறைப்பை விமான நிறுவனங்கள் அமல்படுத்த வேண்டும் என்று போக்குவரத்து அமைச்சர் டத்தோஸ்ரீ டாக்டர் வீ கா சியோங் கூறினார். விமானக் கட்டணங்கள் குறிப்பாக சரவா மாநிலத்திற்கு விதிக்கப்படும் கட்டணம் பயணிகளுக்கு சுமையளிப்பதாக உள்ளது என்று தனது முகநூல் வாயிலாக வெளியிட்ட பதிவில் அவர் குறிப்பிட்டுள்ளார். 2022 ஆம் ஆண்டு இறுதி விடுமுறை காலத்தில் சரவா மாநிலத்திற்கு விதிக்கப்படும் அதிகப்படியான கட்டணம் குறித்து பலர் தங்களின் கோபத்தை வெளிப்படுத்தியுள்ளனர். விமான நிறுவனங்களின் இச்செயல் சுற்றுப்பயணிகளுக்கு மட்டுமின்றி கோவிட்-19 பெருந்தொற்று காரணமாக நீண்ட காலத்திற்கு பிறகு தங்கள் குடும்பத்தினரைச் சந்திக்க செல்வோருக்கும் பெரும் பாதிப்பை உண்டாக்கியுள்ளது என்று அவர் குறிப்பிட்டார். விமானக் கட்டண உயர்வு மற்றும் பயண இடைவெளி தொடர்பில் சரவா மாநிலத்திலுள்ள பல அரசு சாரா அமைப்புகள் அண்மையில் தங்களின் அதிருப்தியை வெளியிட்டிருந்தன.

## டிசம்பர் 18 ஆம் தேதி சரவா மாநிலத் தேர்தல்

# டிச. 6 இல் வேட்புமனுத் தாக்கல்

கூச்சிங் – சரவாக் மாநிலத்தின் 12வது தேர்தல் டிசம்பர் 18ஆம் தேதி நடைபெறும் என்று தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

தேர்தல் ஆணையத்தின் தலைவர் டத்தோ அப்துல் கானி சலே, தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் டிசம்பர் 6ஆம் தேதியும், முன்கூட்டியே வாக்குப்பதிவு டிசம்பர் 14ஆம் தேதியும் நடைபெறும் என்று தேர்தல் ஆணையத்தின் தலைவர் டத்தோ அப்துல் கனி சாலே கூறினார்.

சரவா மாநில தேர்தல் தொடர்பான தேர்தல் ஆணையத்தின் சிறப்புக் கூட்டத்திற்குத் தலைமை தாங்கிய பின்னர் செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார்.

இவ்வாண்டு ஜூன் 6 ஆம் தேதி மாநில சட்டமன்றத்தின் தவணைக் காலம் முடிவடைந்தது. எனினும், அவசர காலம் அப்போது அமலில் இருந்ததால் தேர்தலை நடத்த முடியவில்லை.


கோவிட்-19 நோய்ப் பரவலை தடுக்கும் நடவடிக்கையாக நாட்டில் அவசரகாலத்தை மாட்சிமை தங்கிய பேரரசர் அல்-சுல்தான் அப்துல்லா ரியாதுதீன் அல்-முஸ்தபா பில்லா ஷா கடந்த ஜனவரி 11 ஆம் தேதி பிரகடனம் செய்தார்.

ஆகஸ்டு முதல் தேதி நாடு தழுவிய அவசரநிலை முடிவடைந்தபோது, ஆகஸ்ட் 2 ஆம் தேதி முதல் 2022 ஆம் ஆண்டு பிப்ரவரி வரை சரவாக்கிற்கு அவசரகால நிலையை மாமன்னர் பிரகடனம் செய்தார். இந்த அவசரநிலை நவம்பர் 3 ஆம் தேதி நீக்கப்பட்டது, இதனைத் தொடர்ந்து சரவா மாநிலத்தில் தேர்தல் நடத்தப்படுகிறது.




## பொது முடக்க காலத்தில் மாணவர்களுக்கு

# 30,000 புத்தகங்கள் விநியோகம்



சிலாங்கூர் டியூஷன் ராக்யாட் திட்டத்தின் கீழ் கடந்த ஏப்ரல் மாதம் முதல் 30,000 வழிகாட்டி புத்தகங்களை சிலாங்கூர் அரசு மாணவர்களுக்கு வழங்கியது.

பள்ளி மூடப்பட்டிருந்த காலக்கட்டத்தில் மாணவர்கள் தங்கள் படிப்பைத் தொடர்வதற்கு ஏதுவாக ஆறாம் ஆண்டு மற்றும் ஐந்தாம் படிவ மாணவர்களுக்கு இந்த புத்தகங்கள் வழங்கப்பட்டதாக மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கூறினார். சிலாங்கூர் டியூஷன் ராக்யாட் திட்டத்தின் கீழ் ஐந்தாம் படிவ மாணவர்களுக்கு 20,000 புத்தகங்களும் ஆறாம் ஆண்டு மாணவர்களுக்கு 10,000 புத்தகங்களும் வழங்கப்பட்டன என்று அவர் தெரிவித்தார்.

பள்ளி மூடப்பட்டிருந்த காலத்தில் பாடங்களை படிப்பதற்கு இந்த புத்தகங்கள் பெரும் பயனாக இருந்துள்ளது மாணவர்களிடமிருந்து பெறப்பட்ட கருத்துகள் மூலம் தெரிய வந்துள்ளது. இணையம் மற்றும் மின் உபகரண வசதிகள் இருந்த போதிலும் மாணவர்களுக்கு இந்த புத்தகங்கள் பெரிதும் உதவி புரிந்துள்ளன என்றார் அவர்.

செபிந்தாஸ் எனப்படும் சிலாங்கூர் அடிப்படை தொழில்நுட்ப இரவல் திட்டம் குறித்து கருத்துரைத்த மந்திரி புசார், சிலாங்கூர் பொது நூலகத்திடமிருந்து பெறப்பட்ட இத்திட்டம் பல்வேறு மாற்றங்களுடன் அமல்படுத்தப்பட்டுள்ளதாக சொன்னார். மாணவர்கள் குறிப்பாக பி40 தரப்பினருக்கு கணினி மற்றும் இதர உபகரணங்களை வழங்கும் முறையை மேம்படுத்தும் நோக்கிலான இத்திட்டதை மாநில அரசு அமல்படுத்துகிறது என்று அவர் சொன்னார்.

Diterbit oleh Media Selangor Sdn Bhd Aras 11, Menara Bank Rakyat, No. 1, Jalan Indah 13/8, Seksyen 14, 40000 Shah Alam -Dicetak oleh POLARVISTA Sdn.Bhd. 15, Jalan 6/118C, Desa Tun Razak, 56000 Cheras, Kuala Lumpur. Tel: 03-91731434 Fax-03-91731412